


செப்டம்பர்

1999

12/=

# தொண்டன்

ஆரம்பம் : பெப்ரவரி - 1969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பக்கம்

## அட்டையில் மரியன்னை அழகு

யூலைத்தொண்டனில் இடம் பெற்ற தேவை... தேவை கவிதை இக்கால கட்டத்துக்கு தேவையான தொன்றாகும். "ஆகஸ்ட்" தொண்டன் அட்டை வெகு சிறப்பாக அமைந்திருந்தது. கண்ணதாசனின் காவிய அடிகளுக்கு ஏற்ப மரியன்னை காட்ச்சியளித்துள்ளார். அட்டையை அலங்கரித்துக் கொடுத்த புனித வளனார் அச்சகத்தினரைப் பாராட்டத்தான் வேண்டும். வளரட்டும் தொண்டன்.

ஜே. அருளப்பு
மட்டக்களப்பு.

## வாழ்த்துகிறேன்

நான் தொண்டன் சஞ்சிகையைத் தொடர்ந்து வாசித்து வருகிறேன். கடந்த ஏப்பிரலில் அருட்தந்தையர்கள் எழுதிய கட்டுரைகள் அனைத்தும் சிறந்த நற்கருத்துக்களை உள்ளடக்கி ஊக்கம் ஊட்டுவனவாக அமைந்திருந்தன. தொண்டன் தேவனைப் பிரியப் படுத்தும் சிறந்த சஞ்சிகையாக மிளிர வேண்டுமென செபிக்கிறேன். வாழ்த்துகிறேன்.

G.B. மேர்சி ஜெயா
இரத்மலாணை.

## புதிய உலகம்

கத்தோலிக்க வானொலிநிகழ்ச்சியின் ஆயிரமாவது மலர் நிறைவை முன்னிட்டு நடத்தப்படும்

## "மாபெரும் கவிதைப்போட்டி"

**தலைப்பு** *புதுஉலகம் படைக்கப் புறப்பட்டு வருக.!*

**விதிகள்**

* 40 முதல் 60 வரிகளுக்குள் கவிதை அமைய வேண்டும்.
* தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே கவிதை எழுதப்படுவதோடு பெயரும் முகவரியும் வேறாக எழுதி இணைக்கப்பட் வேண்டும்.
* நடுவர்களால் தெரிவு செய்யப்படும் மூன்று கவிதைகளுக்குப் பரிசுகள் வழங்கப்படுவதோடு அவை புதிய உலகம் நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும்.
* போட்டி இறுதி நாள் 1999 செப்டம்பர் 30

*முகவரி*

புதிய உலகம்
ஆயிரமாவது மலர் கவிதைப் போட்டி
அ. பெ. எண் 44
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

செப்டம்பர் - 1999

மலர் 31 — இதழ் 08

ஆசிரியர்:
A. தேவதாசன்

இணை ஆசிரியர்:
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்கள்:
S. A. இருதயநாதன்
மெற்றில்டா இராஜேந்திரம்


வெளியீடு:
சமூகத் தொடர்பு நிலையம்,
திரு/மட். மறை மாவட்டம்.

முகவரி:
சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44,
BATTICALOA. 30000
Tel: 065-22723

விலை: 12/-

ஆண்டுச் சந்தா: 140/-
(தபாற்செலவு உட்பட)



உள்ளே........

1. இதயந்திறந்து ... 02
2. சிறு கிறிஸ்தவ ... 03
3. செபித்துப்பார் ... 05
4. வித்துவான் கமலநாதன் ... 06
5. பார்த்திபனின் ... 07
6. இறை வார்த்தையின் ... 10
7. இரு தாயும் ... 11
8. திருச்சபைச் செய்திகள் ... 12
9. வண்டியின் அச்சாணி ... 14
10. சமூக நோக்கில் ... 16
11. கதைசொல்லும் விவிலியம்... 18
12. சுவடுகள் ... 19
13. கலை இலக்கிய மஞ்சரி ... 20
14. யாழ். இலக்கியப் ... 21
15. புதிய உலகம் ... 22
16. விவிலிய - பொது அறிவு ... 27
17. போட்டி முடிவுகள் ... 28

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயந் திறந்து............

பெரிய வட்டத் திருச்சபை
இன்று சிறிய வட்டமாகிறது.
அதை சிறிய கிறிஸ்தவ குழுக்கள்
என அழைக்கிறார்கள்.
மறை மாவட்டம் என்னும்
பெரிய வட்டத் திருச்சபை
பங்கு என்ற சிறு வட்டமாய் இருக்கிறது.
பங்கு என்ற திருச்சபை
வட்டாரம் என்னும் சிறு வட்டமாய் இருக்கிறது,
இனிமேல்
அந்த வட்டாரத் திருச்சபைகூட
சிறிய குழுக்களாக பிரிக்கப்பட உள்ளன.
அவை சிறிய கிறிஸ்தவ குழுக்கள் எனப்படும்.
அந்தச் சிறிய குழுவில்
ஆதிகால திருச்சபை வாழ்க்கை முறை வரவேண்டும்.
அதில்
விவிலியம் வாசிக்கப்பட்டு, பகிரப்பட்டு
அந்த வார்த்தையின் ஒளியில்
அக்குழுக்களைச் சார்ந்தவர்களின்
தேவைகள் நிறைவு செய்யப்படவேண்டும்.
அக்குழுவின் அங்கத்தவர்கள்
ஒரே மனம் கொண்டவர்களாய் வாழவேண்டும்.
அக்குழுவின் பிரதிநிதிகள்தான்
பங்கு மேய்ப்புப் பணிச்சபையை அமைப்பார்கள்.
இதுபோன்ற சிறிய கிறிஸ்தவ குழு
"அன்பியம்" என்ற பெயரில் அழைக்கப்படும்.
இதுபோன்ற அமைப்பை வரவேற்கின்றோம்.
அங்கு அதில் யாரும் அந்நியராக இருக்கமாட்டார்கள்
அவர்களது திறமைகள், பரிசுத்த ஆவியின் கொடைகள்
பயன்படுத்தப்பட்டு
உயிரோட்டமுள்ள குட்டிக்குட்டித் திருச்சபைகள்
பங்கு முழுக்க உருவாகும்.

★ ஆசிரியர்

---




**உன்னைப் படைத்தவரை**
**உன் இளமைப் பருவத்தில்**
**மறவாதே**

சபை உரையாளர் 12/1

# சிறு கிறிஸ்தவ குழு மங்கள் - என்ன இது?

**★ அருட் கலாநிதி டொமினிக் சாமிநாதன்**

திருச்சபை என்னும் கட்டிடத்தை அமைக்கும் கற்களாகத் திகழ்பவை சிறு கிறிஸ்தவ குழுமங்கள் என்றால் மிகையாகாது. திருச்சபையின் வளர்ச்சியிலும் புதுப்பித்தலிலும் சிறு குழுக்களே எப்பொழுதும் முக்கிய பங்கு வகித்து வந்துள்ளன என்பதற்குத் திருச்சபையின் வரலாறு சான்று பகிர்கின்றது. இன்றும் ''ஆசிப்பா'' என்னும் பெயருடன் அம்முறைதனையே, ஆசிய திருச்சபை மறுபடியும் கண்டுபிடித்துக் கடைப்பிடிக்க முயல்கின்றது. ஏன், ஆசியாவில் மட்டுமல்ல, அகில உலகம் முழுவதிலுமே திருச்சபை இம்முறை தனைக் கடைப்பிடிக்கின்றது. இச்சிறு குழுக்களினால் பாருலகெங்கும் விசுவாசத்தில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சி சொல்லுந்தரமன்று. ஆழ்ந்த கிறிஸ்தவ விசுவாசப் பயிற்சிகளும், விசுவாசப் புரட்சிகளும்கூட இன்று சிறுசிறு குழுமங்களினூடாகவே நடைபெறுகின்றன.

இலத்தீன் "அமெரிக்காவிலே வறுமையில் வாழும் கத்தோலிக்கர்களும்கூடச் சிறுசிறு குழுக்களாக, செபிக்கவும், விவிலிய வார்த்தையைக் கேட்கவும், தியானித்து அதன் பொருளை உணர்ந்து தங்கள் வாழ்வில் கடைப்பிடித்துப் புனிதராக மாறவும், வாரந்தோறும் தவறாது கூடுகின்றனர். அங்கு விடுதலை இயக்கப் புரட்சிகளுக்கும், இறையியல் சிந்தனைகளுக்கும், சுரண்டல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் எழுச்சிகளுக்கும், ஆன்மீக விழிப்புணர்ச்சிகளுக்கும் வித்திட்டது இச்சிறு குழுமப் படிமுறையேயாகும்.

சீன அரசு கலாச்சாரப் புரட்சி என்ற போர்வையில் கிறிஸ்தவர்களையும் திருச்சபையையும் துன்புறுத்தி அழிக்க முயன்ற பொழுதெல்லாம், சிறு குழுக்களிலே இல்லத் திருச்சபையாக கிறிஸ்தவம் மலர்ந்ததே யொழிய அழியவில்லை. பிலிப்பீன்சிலே மார்க்கோசின் சர்வதிகாரத்தை வீழ்த்தி, மக்களாட்சியைக் கொண்டுவரச் செய்ததும் சிறு கிறிஸ்தவ குழுமங்களின் வேலைப்பாடேயாகும் என இப்போது கூறுகின்றனர். தென் கொரியாவிலும் ஆபிரிக்காவின் பல பாகங்களிலும் இன்று திருச்சபை ஆழமாக வேரூன்றியுள்ளதெனில் அதற்கும் காரணம் அங்கு பரவியுள்ள பல்லாயிரக்கணக்கான சிறு கிறிஸ்தவ குழுமங்களேயாகும். கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் உடைந்துபோன சோவியற் யூனியனிலும்கூட ஏற்பட்ட மாற்றங்களுக்கும் மறுமலர்ச்சிக்கும் பின்னணியில் நின்று செயலாற்றியது சிறு கிறிஸ்தவ குழுமங்களே என்று சொல்லப்படுகின்றது. இன்று அவுஸ்திரேலியாவின் பல பாகங்களிலும் விசுவாச மலர்ச்சிக்குப் பாதையமைத்துக் கொண்டிருப்பது பங்குகள்தோறும் செயல்படுகின்ற சிறு கிறிஸ்தவ குழுமங்களேயாகும். ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும்கூட இத்தகைய சிறு கிறிஸ்தவ குழுமங்கள் விசுவாச மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன.

இவ்வாறு இன்று இறைவன் ஒரு புதிய ஆன்மீகப் புரட்சியினை இத்தகைய சிறு கிறிஸ்தவ குழுமங்கள் மூமலாய் உலகின் எப்பகுதியிலும் ஆற்றிவருகின்றார். பல இடங்களில் இச்சிறு குழுக்கள், பிராந்திய ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் ஒன்றிணைந்து, தங்கள் செயற்பாடுகளை விஸ்தரித்துப் பாரிய மறுமலர்ச்சி இயக்கங்களாக மாறிவருகின்றன.

நமது நாட்டில் இப்பொழுதுதான் இச்சிறு கிறிஸ்தவ குழுமங்களின் சக்தி கத்தோலிக்க திருச்சபையினரிடம் உணரப்படுகின்றது. இப்பொழுதுதான், விசுவாச மறுமலர்ச்சிக்கு சிறு கிறிஸ்தவ குழுமங்களே அதிமுக்கிய கருவியாகும் என்பது தெளிவாகியுள்ளது.

ஆயினும் திருச்சபையின் வரலாற்றிலே இது ஒரு புதிய முறையன்று. இதுவே ஆதி முதல்லிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் முறையாகும். ஆனால் இன்று புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, புதிய பாணியிலே புதிய ஒரு செயற்பாடாக எங்கும் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கின்றது.

உண்மையிலே, நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து கடைப்பிடித்த வழியும் இதுவேயாகும். விண்ணரசின் நற்செய்தியினைப் பரப்புவதற்கு இயேசு இத்தகைய சிறிய குழுவினையே தனது ஆயுதமாகப் பாவித்துள்ளார். புனித மாற்கு எழுதிய நற்செய்தி இதற்குச் சான்று பகர்கின்றது. தம்மோடு இருக்கவும், நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும், பேய்களை ஓட்ட அதிகாரம் கொண்டிருக்கவும், அவர் பன்னிருவரை நியமித்தார் (மாற்கு 3:14-15).

இவ்வுலகிலே மனிதனாக இயேசு வாழ்ந்த காலமோ 33 ஆண்டுகளே. அதிலும் தீவிர பணிபுரிந்து விண்ணரசை மண்ணுலகிலே நாட்ட அவருக்குக் கிடைத்த காலம் மூன்றே மூன்று ஆண்டுகள் மட்டுமே. இந்த மூன்று ஆண்டுகளிலும், அவர் பிரயாணம் செய்த அதிநீண்ட தூரம் 150 மைல்களேயாகும். இதனால் அந்தக் குறுகிய மூன்று ஆண்டுகளிலும் ஒரு சிறு குழுவினரின் வாழ்விலேயே தனது விண்ணரசின் அத்திவாரத்தை நன்கு கட்டிடத் திருவுளமானதை இந்த மாற்கு எழுதிய நற்செய்தியின் வார்த்தைகள் நன்கு தெளிவுபடுத்துகின்றன. பிற்காலத்தில் எழும்பக்கூடிய சோதனைப் புயல்களுக்கும் வெள்ளப்பெருக்குகளுக்கும் தாக்குப்பிடிக்கக்கூடியதாக வலிமைவாய்ந்த ஓர் அத்திவாரத்தை அந்தப் பன்னிருவரிடம் போடத் திருவுளமானார் என்பது நன்கு புலப்படுகின்றது.

இதனால் தனது பணிக்காலத்தின் அதிக நேரத்தை இப்பன்னிருவருடனுமே செலவு செய்ததை நற்செய்தி ஏடுகளில் நாம் காணலாம். உலகையே மீட்கவந்த இயேசு இந்தப் பன்னிருவரைக்கொண்ட குழுவுடன் அதிக நேரத்தைச் செலவு செய்தது, இக்காலக் கணக்குப்படி ஆச்சரியமாகவே தென்படும். ஆயினும் அங்குதான் இயேசுபிரானின் வினைத்திறனும் வழிகாட்டலும் செயல்முறை இரகசியமும் காணக்கிடக்கின்றன. இச்சிறு குழுவினருடன் செலவு செய்த நேரங்களிலே தான் விண்ணரசின் சிறப்பினை அவர்களுக்குப் புகட்டினார். ஒருவரையொருவர் அன்பு செய்ய வேண்டுமென அவர்களுக்குக் கற்பித்தார், அதனைச் செயலிலும் காட்டினார். கடவுளரசின் நற்செய்தியை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள அவர்களுக்குக் கற்பித்தார், பயிற்சியும் அளித்தார். இவ்வாறு கிறிஸ்து இந்தப் பன்னிருவருடனும் செலவு செய்த காலத்தையும் நேரத்தையும் பார்க்கும் பொழுது, அது அவர் மற்ற மக்களுடன் செலவு செய்த நேரத்தைவிட பன்மடங்கு அதிகமாகவே காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் பற்பல சந்தர்ப்பங்களில் தனது பன்னிருவருக்கேயெனப் பல நேரங்களை அவர் ஒதுக்கி வைத்திருந்ததையும் நாம் காணமுடிகின்றது. அது அவர்களது நேரம் அவர்கள் தங்கள் போதகரோடு செலவு செய்யும் நேரம். அவர்களுக்கு மட்டும் இயேசு போதிக்கும் நேரம் எனக் காண்கிறோம். அவர்களோடு உணவு அருந்தினார், உரையாடினார், உறங்கினார், நடந்து சென்றார், கடலில் பிரயாணம் செய்தார், மீன்பிடிக்கச் சென்றார், அவர்களோடு சேர்ந்து செபித்தார். இவ்வாறு பல வழிகளிலும் இந்தப் பன்னிருவரைக்கொண்ட சிறிய ஒரு குழுவையே சட்டியெழுப்புவதில் காலம் கடத்தினார். இயேசுவின் இச்செயலே நமக்கெல்லாம் சிறிய குழுக்களின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புவதாயும் அதனால் விளையக்கூடிய மாபெரும் அற்புதச் பெயல்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும் அமைந்துள்ளது. எனவேதான் திருச்சபையும் இன்று சிறிய கிறிஸ்தவ குழுமங்களை உருவாக்குவதில் அதிக அக்கறை செலுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபித்துப்பார்

பெனி யே. ச.

செபம் - வாழ்வின்
தவம்.

செபம்
பரமாத்மாவும் ஜீவாத்மாவும்
பேசிக்கொள்ளும்
பரிபாஷை.

அன்பே - அதன்
ஆதார சுருதி

பக்தியே - அதன்
சக்தி

விசுவாசமே - அதன்
சுவாசம்

செபமில்லாத வாழ்வில்
ஜீவனில்லை


இதயம்
இறைவனிடம் சரணடையும் - அந்தத்
தவப்பொழுதை
தொழுகை என்கிறது
இஸ்லாம்.

தியானம் என்கிறது
இந்துமதம்

பிரார்த்தனை என்கிறது
பௌத்தம்

செபம் என்கிறது
கிறிஸ்தவம்

இயேசுவின் வாழ்வைக்
கொஞ்சம் எண்ணிப்பார்



அன்றாடப் பணிகளுக்கிடையேயும்
அதிகாலைப் பொழுதில்
தனிமையான
இடம் தேடிச் சென்றார்
நற்செய்தி நவில்கிறதே.

ஆண்டவனின் மைந்தனுக்கே
செபம்
அவசியப் பட்டதென்றால்
மனிதா......
பாவிகள் நாம்
பரம்பொருளை அடையும்
பாதையன்றோ செபம்!

செபத்தின் பயன்
செபத்தில் இல்லை.

பூஞ்செடிகளுக்கு
தண்ணீர் வார்க்கிறோம்
பயன் - நீரில் இல்லை;
பூக்களில்

செபத்தின் பயன்
செபத்தில் இல்லை - உன்
நடத்தையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துவான் சா. இ. கமலநாதன் அவர்களுக்கு 'இலக்கிய கலாநிதி' பட்டம்

மட்டக்களப்பின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பங்காற்றிக் கொண்டிருக்கும் அறிஞரும், பதிப்பாசிரியரும், சமூக கலை இலக்கியப் பணியாளருமான வித்துவான் சா. இ. கமலநாதன் அவர்களுக்கு கிழக்குப் பல்கலைக் கழகம் தனது ஆறாவது பட்டமளிப்பு விழாவில் 'இலக்கிய கலாநிதி' பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்தவரான வித்துவான் கமலநாதன் அவர்கள் ஏறத்தாள நாற்பது ஆண்டுகளாக ஆசிரியப் பணியில் ஈடுபட்டவர். மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் பத்து ஆண்டுகாலம் அதிபராகப் பணிபுரிந்தவர். இக்கல்லூரியின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் அவர் அளித்த பங்களிப்பு அளப்பரியது. இன்றும் உயர்கல்வி மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அன்னாரது வழிகாட்டலும், உதவியும் கிடைத்துக்கொண்டிருக்கின்றன.

மட்டக்களப்பில் சிறுகதை இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவர் என்று கருதப்படும் இவர் சிறுகதைகள், கவிதைகள், சிறுவர் இலக்கியங்கள், கட்டுரைகள், ஆய்வுகள் என பலதரப்பட்ட முயற்சிகளில் ஈடுபட்டவர். பல நூல்களின் பதிப்பாசிரியராகவும் இருந்துள்ளார். அமைதியாக இருந்து ஆரவாரம் எதுவுமின்றி பணியாற்றுவதோடு மட்டக்களப்பின் மரபியற் கலைகளை, இலக்கியங்களை வெளிக்கொணர்வதிலும் ஈடுபட்டவர்.

சமூகப் பணிகளிலும் ஆர்வமுள்ள இவர் பல அமைப்புக்களில் இணைந்து பணிபுரிந்துள்ளதோடு பொறுப்பான பதவிகளையும் வகித்தவர். அன்னாரது பன்முகப்பட்ட பணிகளின் காரணமாக பல்வேறு விருதுகளையும், பட்டங்களையும் பெற்றுள்ளார். 1993ம் ஆண்டு தேசிய சாகித்திய விழாவில் 'தமிழ் ஒளி' என்னும் பட்டம் இவருக்கு வழங்கப் பட்டது. 1998ம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருது கிடைத்தது. தற்போது கிழக்குப் பல்கலைக்கழகம் வித்துவான் சா. இ. கமலநாதன் அவர்களுக்கு 'இலக்கிய கலாநிதி' பட்டத்தினை வழங்கிக் கௌரவித்துள்ளது. நமது அறிஞர் ஒருவருக்குக் கிடைத்த இக்கௌரவத்தை எண்ணி திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத் திருச்சபையின் சார்பில் தொண்டன் தனது மகிழ்ச்சியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுகிறது.

— மலர்

## நமது மறைமாவட்டத்துக்கு ஐந்து புதிய குருக்கள்

மட்டக்களப்பு, இருதயபுரம் பங்கைச் சேர்ந்த சகோ. ஜெரோம் டிலிமா, சகோ. அலெக்ஸ் றொபேர்ட், மட்டக்களப்பு, புளியடிக்குடாப் பங்கைச்சேர்ந்த சகோ. பேதுரு ஜீவராஜ், பெரியபுல்லுமலை, கோப்பாவெளியைச்சேர்ந்த சகோ. அன்ரனி ஜெயராஜ் ஆகியோர் இம்மாதம் 2ம் திகதி வியாழக் கிழமை குருக்களாகத் திருநிலைப்படுத்தப் பட்டனர். மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் நடைபெற்ற குருத்துவ திருநிலைப்படுத்தும் சடங்கை மறைமாவட்ட ஆயர் பேரருள்தந்தை யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் நடத்தினார். அதே வேளை திருகோணமலை சின்னக்கடைப் பங்கைச்சேர்ந்த சகோ. றொஹான்பேர்னாட் இம்மாதம் 7ம் திகதி செவ்வாய்க்கிழமை சின்னக்கடை புனித குவாடலூப்பே அன்னை ஆலயத்தில் குருவாகத் திருநிலைப் படுத்தப் பட்டார்.

பணிவாழ்வில் பலியாகத் தம்மை ஒப்புக் கொடுக்க புதிய குருக்களுக்கு இறைவன் தம் ஆசீரை நிறைவாக அருள வேண்டுமென தொண்டன் இறைஞ்சுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ந. பார்த்திபனின் ம(னி)தம் ஒரு நோக்கு

★ அன்புமணி

## 1. அறிமுகம்

மதம் Vs. மனிதம் என்ற கருவை (Theme) தலைப் பிலேயே ''ம(னி)தம்'' என அர்த்தபுஷ்டியாக எடுத்துக் காட்டி, அதற்கேற்ப மூன்று நண்பர்களின் சங்கமத்தைக் குறிக்கும் படத்துடன் மூன்று வருடங்கள் ''தொண்டனில்'' தொடர்ந்து வந்த இக்கதை ''தொண்டன்'' ஆசிரியர் குறிப்பிடுவதுபோல், சுற்றிவளைக்காமல் நேரடியாகவே கதைசொல்லும் பண்பினைக் கொண்டது.




உண்மையில் மதம் எதற்காக உருவாக்கப்பட்டது என்பதை அறியாதவர்களே மதத்தின் பேரால் கொலை வெறியராகிறார்கள், அல்லது மதமாற்றத்தில் ஈடுபடுகி றார்கள். மனிதம் அல்லது மனிதநேயமே மதங்களின் இலக்கு. ஆனால் மதவெறியர்கள் நடைமுறையில் அதற்கு நேர்மாறாகச் செயல்படுகிறார்கள். இந்தச் செய்தியை (Message) மிக நாசூக்காக இக்கதை மூலம் சமூகத்துக்குத் தெரியப்படுத்துகிறார் கதாசிரியர்.

உலகெங்கும், இந்தியா உட்பட, மதத்தின்பேரால் மதவெறியர்கள் செய்யும் அட்டூழியங்கள், அக்கிரமங்கள், படுகொலைகள் என்பன, தனிமனிதரை மட்டுமல்லாது ஊர்களையும், பிரதேசங்களையும் படு கொடூரமாகச் சிதைத்திருக்கிறது. இச்சிதைவு மனிதத்தின் - மனிதநேயத்தின் சிதைவே என்பது வெளிப்படை. இதுபற்றி ஏற்கனவே பல்வேறு வடிவங்களில் இலக்கிய ஆக்கங்களும் திரைப் படங்களும் வேறு கலைவடிவங்களும் வெளிவந்துள்ளன. ஆனாலும் ''மனிதம்'' நமக்கு மிக நெருக்கமான முறையில் காதோடுகூறுவதுபோல் இச்செய்தியைச் சொல்கிறது.

## 2. கதை

''மனித''த்தின் கதை இவ்வாறு அமைகிறது. - கண்ணன் (இந்து) வின்சென்ட் (கிறிஸ்து) ரலீனா (இஸ்லாம்) ஆகிய மூவரும் பாரதி வித்தியாலய ஆசிரியர்கள், முற்போக்குச் சிந்தனை கொண்டவர்கள், கண்மூடித்தனமான சமூகக் கட்டுப்பாடுகளை நிராகரிப்பவர்கள், பாடசாலை வாழ்க்கையில் வின்சன்ட் ரலீனா ஆகியோருக்கிடையே காதல் துளிர்விடுகிறது. வழக்கம்போலவே வதந்திகள், வம்பர்களின் எதிர்ப்புகள், பாடசாலை நிர்வாகத்தின் நடவடிக்கை அதன் விளைவு? ரலீனா வேறு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய பாடசாலைக்கு மாற்றப்படுகிறாள். எதிர்ப்பின் மத்தியில்தான் காதல் தீவிர வளர்ச்சி பெறுகிறது என்பது வரலாறு.

வின்சென்டும் - ரலீனாவும் பெற்றோருக்குத் தெரியாமல் ''ஓடிப்போய்'' தம்பதிகளாகித் தனிக்குடித்தனம் நடாத்துகின்றனர். பூகம்பம் வெடிக்கிறது.

மதத்தின் காவலர் என்று சொல்லிக் கொள்ளும் சேர்ச்சும், பள்ளிவாசலும் போர்க்கொடி உயர்த்துகின்றன, எப்படி? இருவரும் தத்தம் மதத்தில் இருக்கக்கூடாது. ஒருவர் மற்றவர் மதத்துக்கு மாறவேண்டும். மனிதாபிமானமற்ற இந்தத் தீர்வினால், கிறிஸ்தவ சமூகத்துக்கும் இஸ்லாம் சமூகத்துக்கிமிடையே பகைமை ஏற்படுகிறது.

உற்ற நண்பனாக, ஆரம்பம் முதல் உதவி வந்த கண்ணன், சுமுகநிலை ஏற்படுத்துவதற்காக, சமாதானத் தூதுவனாகச் செல்கிறான். பள்ளிவாசல்முன் கூடிநின்ற முஸ்லிம் காடையர் கும்பல், அதை அறியாது கண்ணனைத் துவம்சம் செய்து விடுகின்றது. மதவெறி என்பதே கதையின் Message என்பதால் அதுவே கதையின் உச்சக்கட்டம் (Climax) ஆகிவிடுகிறது.

3. பாத்திரங்கள்

இக்கதையில் வரும் ஒவ்வொரு பாத்திரத்தின் குணாதிசயமும், மிகச் சிறப்பான முறையில் வெளிப்படுவது பாத்திர உருவாக்கத்தின் நுட்பம் எனக்கூறலாம். அந்தவகையில், முற்போக்குச் சிந்தனையும் ஒத்த கலாரசனையும் உடைய கண்ணன், வின்சன்ட், ரலீனா ஆகிய முக்கிய பாத்திரங்களைவிட உப பாத்திரங்களாக வரும் பின்வருவோரும் நன்கு வார்க்கப்பட்டுள்ளனர்.

பாங்க் உத்தியோகத்தர் என்ற பெருமையில் மூழ்கியிருக்கும் பாங்கர் அந்தோனிப்பிள்ளை (வின்சென்டின் தந்தை) தீவிர சமய பக்தி, அதேசமயம் பூங்கன்று வளர்க்கும் மென்மை உள்ளம் கொண்ட வின்சென்டின் அம்மா, உலக நடப்புகளை நன்கு புரிந்து கொண்ட, ரலீனாவின் தந்தை முலாபர், உலகமே அறியாது வீட்டுக்குள்ளே வளரும் அப்பாவியான, ரலீனாவின் தாயார் ஜனூன் எதிலும் பட்டுக்கொள்ளாது, எடுப்பார் கைப்பிள்ளையாக இயங்கும் பாரதி வித்தியாலய அதிபர் முதலியோர் உயிருள்ள பாத்திரங்களாகவே சிருஷ்டிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இடம்பெறும் ஒவ்வொரு சம்பவத்திலும் இவர்களது குணாதிசயங்கள் நன்கு வெளிப்படுகின்றன. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் சேர்ச் சென்றுவிட்டு வரும் போது, வார இறுதிப் பத்திரிகைகளை அள்ளிக்கொண்டுவந்து அதில் மூழ்கிப்போகும் அந்தோனிப்பிள்ளை மூன்றாம் மனிதனான கண்ணனிடமே தமது காதல் கதையைக்கூறி மனைவியைப் பொய்க்கோபம் கொள்ளச் செய்வது ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தின் அந்நியோந்நியத்தை அப்படியே மனக்கண்முன் கொண்டுவருகிறது.

அவ்வாறே முலாபர் - ஜனூன் குடும்பக் காட்சிகள் ஒரு முஸ்லிம் குடும்பத்தை அப்படியே கண்முன் கொண்டுவருகின்றன.

4. கதைசொல்லும் பாணி (Style)

சம்பவக் கோர்வைகள் மூலம் கதையை நகர்த்தாது பெரும்பாலும் ஆசிரியர் கூற்றாகக் கதையைச் சொல்வதே (Narration) கதாசிரியரின் கதைசொல்லும் பாணியாக (Style) அமைகிறது.

கதையில் திருப்பங்களோ, சஸ்பென்சுகளோ இல்லாமல் கதை வளர்ந்து செல்வது கதையின் ''கதைத் தன்மையை'' சிறிது குறைத்தாலும், கதையின் விறுவிறுப்பையும் வேகத்தையும் குறைக்கவில்லை.

ஒரு கதாபாத்திரம் அறிமுகமாகும்போது அதன் குணாதிசயங்களை ஆசிரியரே நேரில் சொல்லிவிடுகிறார். ஆனால் அந்த விபரங்கள் நான்கு வரிகளில் மிகச் சுருக்கமாக அமைந்து விடுவதால், கதையின் ஓட்டத்தை பாதிக்கவில்லை, பின்னால் கதைச் சம்பவங்களில் அப்பாத்திரம் இடம்பெறும் போது, அச்சம்பவம் மனதில் நன்கு பதிவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடல்கள் நீட்டி முழக்காமல் அள வாகவே இடம்பெறுகின்றன. ஆனால் அவ் வுரையாடல்கள் யாழ்ப்பாணப் பேச்சு மொழி யில் அமைந்திருப்பதால் சம்பந்தப்பட்ட பாத்திரங்கள், யாழ்ப்பாணப் பின்னணியைக் கொண்டதாகவே கொள்ளமுடிகிறது. அதே வேளை முஸ்லிம் பாத்திரங்களின் உரையா டல், மட்டக்களப்பு முஸ்லிம்களின் பேச்சு மொழியில் யதார்த்தமாக அமைந்துள்ளது.

பொதுவாகவே பாத்திரங்களின் உரை யாடல்களில் தத்துவமுத்துக்கள் நிறைந்திருப் பதால், கதையின் யதார்த்தம் சற்றுப்பாதிக் கப்படுகிறது. ஆனாலும் இவை புத்திஜீவிக ளின் உரையாடல் என்பதால் அவற்றை இயல்பான உரையாடல்களாகவே கொள்ள லாம்.

5. உத்திகள்

சில சம்பவங்களை வலியுறுத்தும் வகை யில் ஆசிரியர் கூறும் கருத்துக்கள் சிந்தனை யைத் தூண்டுகின்றன. உதாரணங்கள் சில-

''...இன்று மிக வெறித்தனமாகி 'மனிதம்' என்ற வட்டத்துள் உட்சுருங்கி நிற்கும் மதம் அவர்களைப் பாதிக்கவில்லை, தன் நாட் குறிப்பின் முதற்பக்கத்தில் ''மனிதம்'' என் பதே என் மதம் என்றும் அடுத்த பக்கத்தில் புன்னகை என்பதே எனது தாய்மொழி என் றும் எழுதிவைத்துக்கொண்டு (அத்: 3)

சோஷல்சரி, அதற்காகத் தட்டி, தொட் டுக் கதைக்க வேண்டுமா? கணவன்-மனைவி தான் ஆனால் அதைக்காட்ட மற்றவர்கள் முன்னால் - மற்றவர்கள் பார்க்கக் கூசும் செயல், கேட்கத் தயங்கும் பேச்சு அவசியமா? (அத்: 9)

பெற்றோர்கள், உடுக்கடித்து-தீபம்காட்டி பூசை முடித்து அதிபரை உருவெடுத்து ஆட வைத்துவிட்டுப் போய்விட்டார்கள் (அத்:10)

சில பாத்திரங்கள் தாம், படித்த சில விடயங்களையும் அவ்வப்போது வெளிப்படுத் துகின்றன. சகான் சாப்பாடு அருவருப்பானது என வின்சன்ட் சொல்ல ... ... லா. ச. ராமா மிர்தம் எழுதிய ''எச்சில் என்ற தலைப்பில் எழுதிய கவிதை வரிகள் நினைவுக்கு வருகின் றன. ''முதல் முத்தத்தின் எச்சில் ஆரம்பித்து உயிர் முத்துவைத்த வித்திலிருந்து கடைசியில் கண்டவாயில் வழியும் எச்சில்வரை, தலை முறை, தலைமுறை எச்சில் இல்லாவிடில் இப் புவனமே ஏது?'' (அத்: 29) (இது கதையுடன் ஒட்டவில்லை என்பது வேறு விடயம்)

அர்த்தமில்லாத மத உணர்வால் பெற் றோர்கள் தங்கள் பிள்ளைகளின் இல்வாழ்க் கையைக் கருத்தில் கொள்ளாத வக்கிரத்தை ஆசிரியர் இவ்வாறு சாடுகிறார். ''..... அட எங்களின் பிள்ளைகளின் வாழ்க்கை சீரழி கிறதே என ஏன் எண்ணிப்பார்க்கிறார்க ளில்லை? தங்கள் ஈகோவுக்குத் தீனிபோட, அதைத் திருப்திப்படுத்த கத்தி கட்டிச் சண் டைபிடிக்கும் கோழிச் சேவல்களாய் மாறி விட்டார்களே! இவர்களுக்கு மதமென்ற கத் யைக் கட்டிவிட்ட எசமான்கள் யார்?

6. கதைசொல்லும் செய்தி (Message)


சில விமர்சகர்கள் புனைகதைகளை விமர் சனம் செய்யும்போது, பிரச்சினைக்குத் தீர் வும் கூறவேண்டும் என்பார்கள். அது யதார்த் தமாகாது. பிரச்சினையை வாசகர் முன்வைப் பது - அதன்மூலம் வாசகர் சிந்தனையைத் தூண்டுவது இதுவே புனைக்கதைகளின் பணி. அதையே இக்கதாசிரியரும் செய்துள்ளார்.

வின்செனட் - ரஸீனா குடும்பத்துக்காக உயிர்நண்பன் கண்ணன் பலியாவதுடன் கதை முடிகிறது. இதுவே கதையின் உச்சம். இக் கட்டம் வாசகர்களின் உள்ளத்தைத் தொடு கிறது. சிந்திக்கவைக்கிறது. மதக்கோட்பாடு களை - சமூகக் கட்டுப்பாடுகளை மீறி, லட் சத்தில் ஒருவர், கோடியில் ஒருவர் இல்லற வாழ்வில் இணைகின்றனர். நிச்சயமாக இத னால் மதம் பாதிக்கப்படாது - மாசுபடாது. அதில்நாம் (பெற்றோர்/மதநிறுவனம்/சமூகம்) ஏன் தலையிடவேண்டும்? அதில் தலையிட நமக்கு என்ன உரிமை இருக்கிறது. அதில் தலையிட நாம் யார்? நிச்சயமாக இது அந் தத் தம்பதிகளின் பிரச்சினை. அவர்கள் எடுத்த முடிவு அது அவர்கள் உரிமை.

(13ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறை வார்த்தையின் மகத்துவம்

★ மேர்சி ஜெயா - இரத்மலானை

மறை நூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது. அது கற்பிப்பதற்கும், கண்டிப்பதற்கும், சீராக்குவதற்கும் நேர்மையாக வாழ பயிற்றுவிப்பதற்கும் பயனுள்ளது. இவ்வாறு கடவுளின் மனிதர் தேர்ச்சிபெற்று நற்செயல் அனைத்தையும் செய்யத் தகுதி பெறுகிறார். (2 தீமா 3:16, 17)

மனிதனுக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவனின் உயிருள்ள வார்த்தை வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் செய்வதற்கு தேவையான அனைத்து அறிவுரைகளையும் உள்ளடக்கியிருக்கிறது. எல்லாச் சச்சரவுகளுக்குத் தீர்வும் எல்லாத் துன்பங்களுக்கு ஆறுதலும் எல்லாச் சந்தேகங்களையும் நிவர்த்தி செய்தலும், எல்லாவித கஷ்டங்களையும் தாங்கத் தக்கதான பலமும் பிறரால் ஏற்படும் தவறான எண்ணங்களுக்கான தீர்வும் உட்பட வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து புத்திமதிகளையும் உள்ளடக்கியதாக பரிசுத்த வேதாகமமான தேவனுடைய வார்த்தை அமைந்திருக்கிறது. தேவன் மனிதன்மீது கொண்ட அளவற்ற அன்பின் வெளிப்பாடே பரிசுத்த வேதாகமம் என்னும் தேவனுடைய வார்த்தையாகும். இவ்வார்த்தையை வாசிப்பதன் மூலம் இறைவன் எம்மோடு பேசுகிறார். இறை வல்லமையும், விருப்பமும் எம்மில் கிரியைசெய்ய இடமளிக்கிறோம். கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது. இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது. ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்கு குத்தி ஊடுருவுகிறது. எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது. உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது. (எபி. 4:12)

செபத்தோடு இறைவார்த்தையை வாசிக்கும்போது இறை பிரசன்னத்தை அற்புதவிதமாக உணரமுடியும். அவ்வேளையில் நாம் படிக்கும் ஏதாவது வசனத்தின் மூலம் அல்லது சம்பவத்தின் மூலம் இறைவன் எம்மோடு பேசுவார். ஒவ்வொருநாள் காலையிலும் வேதாகமத்தை வாசிக்கும்போது அன்று வரக்கூடிய சகல சோதனைகளையும் முன்னறியும் இறைவன் அதற்கேற்ற வசனத்தை அவ்வேளையில் எமக்குக் கொடுப்பார். சிலவேளைகளில் எமது குறைகளைச் சுட்டிக் காண்பிப்பார். சிலவேளைகளில் எமக்கு அவர் வைத்திருக்கும் ஆசீர்வாதத்தைக் காண்பிப்பார். சிலவேளைகளில் எமது வாழ்வில் இருக்கும் ஏதாவது குழப்பத்திலிருந்து தப்பும் வழியைக் காண்பிப்பார். உடைந்த உள்ளத்துக்கு ஆறுதல்தரும் விதத்தில் தம் அன்பை வெளிப்படுத்தும் வசனத்தைத்தர ஆவலோடு காத்திருப்பார். உடல் நோயினால் வாடும்போது விசுவாசிக்கத்தக்கதான ஒரு வசனத்தை வைத்திருப்பார் மாத்திரமல்ல தேவ வார்த்தையை நாம் வாசிக்கும்போது நம் வாழ்க்கையில் சோதனைகளைக் கொண்டுவரும் சாத்தானின்மேல் ஆண்டவர் நமக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்தையும் வல்லமையையும் நாம் அறிந்து சோதனைகளை மேற்கொள்ள முடிகிறது. இதையே தாவீதும் உமக்கு எதிராக நான் பாவம் செய்யாதவாறு உமது வாக்கை எனது இருதயத்தில் இருத்தியுள்ளேன் என்று கூறுகிறார் (சங். 119:11). இவ்வாறாக இறைவார்த்தையானது தீயசக்தி கொண்டுவரும் எல்லாத் தாக்குதல்களிலிருந்தும் எம்மைப் பாதுகாத்து நேரிய வழியில் இட்டுச்செல்கிறது (நீதி 6:22). எனவே எமது வாழ்க்கையானது தேவனுடைய வார்த்தையால் நடத்தப்பட்டுக் காக்கப்படவேண்டும். எமது வாழ்க்கையின் எல்லா முக்கிய காரியங்களிலும் தேவனுடைய வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமம் தீர்மானிக்கக் கூடியதாயிருக்க வேண்டும். இதுவே வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வின் வழியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இருதாயும் ஒரு தேசமும்"

★ அ. ச. பாய்வா

தெற்கில் - தன்
கடிதவரிகளை முந்திக்கொண்டு
சிங்கக்கொடிக்குள்
'அது'வாக வருவான்
ஏழைப் போர்வீரனொருவன்

ஊர் அவனைப்
பந்தலிட்டுப் பதாதைகளேந்தி
'கெமுனு' வென்கும்
'விஜய' னென்கும்

குச்சுக்குள் மகன்
விகாரமுகம் பார்த்தழுது
சோகந் தணித்து நிற்பாள்
சிங்களத்தாய்

கிழக்கில் - புது
தேசத்தைத் தேடிப்போனவனை
தாரைவார்த்த அன்றே
தலை முழுகிக்கொள்வாள்
திராவிடத்தாய்

அடிபாட்டில் அவன்
அது'வான செய்தியும்...
மறந்துபோன அவன்
முகந்தேடும் ஆக்கினையும்,
ஏகாக்ரக ஆக்கினைக்குள்
அவளை வதஞ்செய்யும்


இந்த இனவாதப்போரில் பலியான
எந்த மகனுக்காயழுவாள்
நம் தேசத்தாய்?

ஆயுதங்கள் ஓரினமாக
அதனை ஏந்தியவர்களோ
எதிரிகளானார்கள்
தங்கள்
பொது எதிரியைப் புரியும்வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபைச் செய்திகள்



★ இறை அன்பின் சாட்சி

இறைவனின் இரக்கம் நிறை அன்பின் மிக உயரிய சாட்சியாக அன்னைமரி இருந்தார் என்பதை மையமாக வைத்து ஜூலை 19ம் திகதி ஞாயிறு மூவேளை உரை வழங்கினார் திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர். இத்தாலியின் மலைப்பிரதேசம் ஒன்றில் கோடை விடுமுறையைச் செலவிட்ட திருத்தந்தை அடைப்பட்ட கன்னியர் துறவுச்சபை இல்லமொன்றுக்குச் சென்றிருந்தார். அங்கு திருத்தந்தை நண்பகல் வழங்கிய செப உரையில் இறைவனின் மீட்புத் திட்டத்தில் உடன் உழைப்பாளியாக இருந்த அன்னை மரியில் தெய்வீக இரக்கத்தின் முழுமையைக் காணமுடியும் என்றார். அடைபட்ட வாழ்வு குறித்து கருத்துத் தெரிவித்த திருத்தந்தை வெளி உலகத் தொடர்பின்றி அடைபட்ட துறவு வாழ்வு என்பது ஆன்மிக சக்தியின் மையமாக உள்ளது. ஆன்மிகசக்தி ஆழ்ந்த தியான வாழ்விலிருந்து பிறக்கிறது என்று குறிப்பிட்ட அவர் கிறீஸ்தவ வாழ்வு என்பது இறைவனின் அழைப்புக்கு எப்போதும் பதிலளிப்பதாகும் என்று எடுத்துரைத்தார்.

★ யூதக்கோயில் கட்ட உதவி

அமெரிக் ஐக்கிய நாட்டின் கலிபோர்ணியா பகுதியில் குண்டு வீசுத் தாக்குதலால் சேதமடைந்த யூதக்கோவில்களை சீரமைக்க 25,000 டாலர்கள் உதவியை வழங்கியுள்ளது அந்நாட்டு கத்தோலிக்க திருச்சபை தீக்குண்டுத் தாக்குதலால் சேதமடைந்த 3 யூதக் கோயில்களையும் மீண்டும் கட்டி எழுப்ப வழங்கப்பட்டுள்ள இப்பண உதவியுடன் தங்களது ஒருமைப்பாட்டுணர்வையும் தெரிவிப்பதாக அமெரிக்க ஆயர்கள் தெரிவித்துள்ளனர். இந்தக்கோயில்கள் மீதான தாக்குதலை வன்மையாக கண்டித்துமுள்ளனர் அமெரிக்கநாட்டு ஆயர்கள்.

★ தனி ஒருவனுக்குணவில்லை எனில்

சிலிபோன்ற கத்தோலிக்க நாடுகளில் உணவுப் பற்றாக்குறை என்ற பேச்சுக்கே இடமிருக்கக் கூடாது என்றார் அந்நாட்டுப் பேராயர் வோஸ்தா. தங்களைக் கிறீஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் வாழும் நாட்டில் மக்கள் உணவுக்காக துன்புறுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என்ற அவர் உதவி தேவைப்படுபவர்களுக்கு உதவும் வழிகளைக் கண்டுகொள்ள கத்தோலிக்கர்கள் முன்வரவேண்டும் என்றார். ஒவ்வொரு கிறீஸ்தவரும் இன்னொரு ஜோடி குடும்பத்துக்கு உதவ முன்வந்தால் சமூகச் சூழல்களை முன்னேற்றலாம் என்றார் அவர்.

★ கருத்தடைச் சாதனங்கள் வேண்டாம்

கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தும் திருமணமான தம்பதிகளுக்கு ஒப்புரவு அருட்சாதனத்தை வழங்கும்போது குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் குறித்து புதிய ஏடு ஒன்றை வெளியிட்டுள்ளது திருப்பீடம். திருமண வாழ்வில் ஒழுக்கரீதி மற்றும் ஒப்புரவு அருட்சாதனம் என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள 13 அத்தியாயங்களைக் கொண்ட இவ்வேடு திருமணத்திற்குள் கற்பு நிலை குறித்தும் விவாதிக்கின்றது. ஒப்புரவு அருட்சாதனத்தை வழங்கும் குருக்கள், பாவ மன்னிப்பு பெற வருவோர் தங்கள் மனச்சான்றை உருவாக்கவும் கருத்தடை சாதனங்களைப் பாவிப்பதைப் பொறுத்தமட்டில் திருச்சபையின் நிலையை அவர்கள் உணரச் செய்வதோடு சருத்தடைச் சாதனங்கள் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இன்றைய நவீன உலகில் இதற்கு எதிராக தம்பதியினரின் மன நிலையை மாற்றுவதில் உள்ள சிரமங்களையும் எடுத்துரைக்கும் இவ்வேடு இச்செயல் பாவம் நிறைந்தது என்பதை தம்பதியர் புரிந்து கொள்ள குருக்கள் உதவவேண்டும் என்றும் விண்ணப்பிக்கின்றது.

### ★ வாழுவிடு

மனித உரிமைகளைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொள்ளும் ஐ. நா. நிறுவனமே கருவிலே வளரும் குழந்தைகளின் வாழும் அடிப்படை உரிமையை மறுக்கும் கொள்கைகளை ஊக்குவிப்பது ஏற்றுக்கொள்ளமுடியாது என்றார் மெக்சிக்கோ கருதினால் ரிவேரா பெரேரா. மனித உரிமைகளைப் பாதுகாப்பதாகக் கூறி, ஐ. நா. நிறுவனத்தின் பின்னால் ஒளிந்துகொண்டு மனித உயிர்களை அழிக்கும் செயல்களை ஆற்றும் மனிதர்கள் குறித்து தன் கண்டனத்தை வெளியிட்டார் கருதினால். சகோதரத்துவம், மனிதாபிமானம் மிக்க உலகை உருவாக்கவே புதிய கண்டு பிடிப்புகளும், வளர்ச்சியும் உதவ வேண்டுமே ஒழிய மனிதனுக்கு எதிரான ஆயுதங்களாக அல்ல என்றும் கூறினார் அவர். இதற்கிடையே ஐ. நா. வின் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்கு 2 கோடியே 50 லட்சம் டாலர்களை வழங்க அமெரிக்க ஐக்கிய நாட்டின் பிரதிநிதிகள் அவை இசைவளித்துள்ளது. 221 வாக்குகள் ஆதரவுடனும் 198 வாக்குகள் எதிர்ப்புடனும் பிரதிநிதிகள் அவையில் நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானம் சீனாவுக்கு இந்நிதி உதவியிலிருந்து எத்தொகையும் செல்லக்கூடாது என்ற விதியைமட்டும் உள்ளடக்கியுள்ளது.

### ★ திருகோணமலை புனித மரியாள் பேராலய விழா 1999

ஆவணித் திங்கள் 6ம் நாள் பேராலய விழா, பங்கு மக்கள் சூழப் பங்குத்தந்தையின் தலைமையில், சிறப்பு மறையுரையாற்றப் பங்கேற்ற, அருட்பணி P. யோசப் அடிகளார் உட்பட அருட்சகோதரர், அருட்சகோதரிகள் சகிதம் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியது. தினமும் நவநாட்கள் பி. ப. 5-30 மணிக்குச் செபமாலை, பிரார்த்தனையும் தொடர்ந்து திருப்பலியும், சிறப்பான மறையுரைகளுடன் நடைபெற்றது நவநாட்களில் தினமும் அருட்பணி P. ஜோசப் அடிகளார், திருநிலைப்படுத்தப்பட இருக்கும் இரு அருட்சகோதரர்களுடன் இணைந்து திருப்பலி நிறைவேற்றினார். அத்துடன் அவர் மக்கள் மனதை ஊடுருவும் முறையில் உரையாற்றியமை, யாவரையும் நற்பயனுடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இட்டுச்செல்ல வழிகோலும் என்பதில் ஐயமில்லை. 14-08-99 பி. ப. 5-30 மணிக்கு அன்னைமரியாளின் திருச்சொரூப பவனி இடம் பெற்று, ஆராதனைகளும் நிறைவேறின. அன்னையின் விண்ணேற்பு விழாத் திருப்பலி 15-8-99 அன்று பங்குத்தந்தை அருட்பணி T. றாகல் அடிகள், அருட்பணி P. யோசப் அடிகள், அருட்சகோதரர் குணம் ஆகியோர் இணைந்து நிறைவேற்றப்பட்டு, கொடி இறக்கும் நிகழ்வும் இனிதே நிறைவாகியது. அன்று மதியம் பங்குமக்களால் வறிய சகோதரர்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்டியின் அச்சாணி

★ சி. சுதந்திரராஜா

## சிறுகதை

தெங்கின் தும்புக் கத்தைகள் தென்னை மரத்தளவில் உயர்ந்த அந்தத் தகரக் கூடாரத்தில் ஏராளமாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வாசலில் நிறுவைப் பாலத்திலே லொறி முழுதாகவே நிறுத்தப்பட்டு மெட்ரிக் தொன் அளவையில் நிறுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. தும்புக் கத்தைகளின் சுகந்தம் மூக்கையும் அறுவைசெய்து கொண்டிருந்தது. விஸ்தீரணமான தொழிற்சாலை. தினந்தோறும் வெளிநாடுகள் பலவற்றிற்கும் ஏற்றுமதி நிகழ்ந்தேறும். மட்ரீட்வரை ஏற்றுமதியாகிப் போகும் தும்புக் கத்தைகள் அங்கிருந்த கொன்ரெயினரில் தென்படவே செய்தன. அடுத்தடுத்த கப்பல்களில் கொண்டு போகும் கொன்ரெயிலர் சிரில் நிறுத்தப்பட்டிருந்தன.

அலுப்பைத் தாங்கிக் கொள்ள முடியாமல் ரொட்ரிகோ பிரிஸ்ரில் தும்புக் கலத்தினுள்ளே வெற்று லொறி நிறுவையையும் தும்பைச் சேர்த்தபடி லொறி நிறுவையையும் பதித்துக் கழித்தபடி கணக்கெடுத்தான். பிரிஸ்ரல் தும்புக் கத்தையில் கணிசமான நீர்ப்பங்கீடும் காணப்பட்டதால் பக்டரி ஒஃபீஸார் பத்துவீதத் தள்ளுபடிசெய்தே கொடுப்பனவுக்கு ஏற்பாடு பண்ணினார்.

தெங்குப் பயிரின் விளைச்சலுக்கு மேலைநாடுகளின் தும்புப்பொருள் தொழிற்சாலைகளில் தக்க கிராக்கியிருந்தது. மூலப்பொருளாகத் தென்னந்தும்பே பயன்பட்டு உற்பத்தியில் அபரிமிதமான பங்கினை வகுத்தே வந்தது. இதனாலேயே தென்னந் தோட்டங்கள் எல்லாமுமே ஏற்ற வருவாயை ஈட்டியும் கொண்டது.

நாரம்மலவிலேயிருந்து வந்த லொறிக்காரன் ரொட்ரிகோவுடன் பலத்த வாக்குவாதத்தில் இறங்கினான். நாரம்மலவில் மழையே பெய்யவில்லை என்றும் பலநாள் வெயிலில் காயவிடப்பட்ட தும்பையே ஏற்றிவந்தானென்றும் அதற்கேன் பத்து வீதத் தள்ளுபடி என வாதிட்டான். ஆனாலும் மில்முதலாளியோ லொறிக்காரனை ஏமாற்றி நீர்ப்பங்குள்ள தும்பையே தலையில் கட்டிவிட்டிருந்தார் ரொட்ரிகோ உடன்படவில்லை விசனப்பட்ட லொறிக்காரன் இனிமேல் அவரோடு கொள்முதல் செய்யப் போவதில்லை என்றே தீர்மானித்தான்.

எரிச்சலும் குமட்டுதலும் ரொட்ரிக்கோவை விரக்தி நிலைவரை இட்டுச் சென்றிடுவதாயிருந்தது. காலையில் வெறுந்தேநீர் கூடக் குடித்திட வழியில்லாத நிலை. வயிறு அரித்துக் கொண்டிருந்தது. தெரிந்தவர்கள் எல்லாரிடமும் கடன் பட்டுவிட்டு தவணை சொல்லித் தப்பியபடி நெளிபவன். காலைத் தேநீருக்கும் தேயிலை சீனி எரிபொருள் வாங்கிடக் குடும்பத்தில் வக்கில்லா நிலை அவனைச் சுட்டுக் கொண்டிருந்தது. மூத்தவன் பள்ளிப் புத்தகங்களுக்கு மீட்டல் பயிற்சிக்கு எத்தனையோ தடவைகள் பணம் வேண்டிக் கேட்டு அலுத்துப்போனான். இளையவனின் காலில் வந்த புண் மாறுவதாயில்லை. மாற்றுவதற்கும் ஏற்ற மருத்துவம் செய்வதற்கும் வகையில்லாமல் மனம் சஞ்சரித்தது. அவனுடைய மனைவி அவனையே வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்தாள். அவனது ஆண்மையைக் கேலி செய்தாள்.

சிந்திக்கார முதலாளியின் மீதே ரொட்ரிகோவின் முழு ஆத்திரமும் அடங்காக் கோபமும் கிளர்ந்து படர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஜராத்திக்காரர்களுக்கே உரித்தான குஞ்சுத் தாடியில் மெல்லிய சிரிப்பில் சபாறி உடையில் முதலாளி வருவார் எவருடனும் சகஜமாகப் பேசுவார். அதிர்ந்து பேசியதே கிடையாது. தனது தந்தையின் நினைவு நாளன்று எல்லோருக்கும் உணவுப் பொட்டலங்களும் குலாப்ஜானும் கொடுத்து நன்கு விநிநோதித்து உபசாரம் செய்யத் தயங்கமாட்டார். இவை எல்லாமே கொள்ளுப்பிட்டியில் உள்ள தன்னுடைய பங்களாவிலேயிருந்து விசேஷமாகத் தருவிப்பார். அக்கம் பக்கத்து அசுத்தக் கடைகளுக்குப் போனதேயில்லை. குளிரூட்டிய காரில் போய்விடுவார்.

அன்றாடம் தும்புகளுக்குப் பிளீச்சிங் செய்து சூளைக்குள் அடைப்பதே கபிரியலின் பாடு. ரொட்ரிகோவின் மாத வருவாயில் மூன்றில் ஒரு பங்கே அவனுக்கும் தேறும். திடகாத்திரமான வேலையாள். மற்றஸ் ஃபைபரையும் பிரிஸ்ரல் ஃபைபரையும் வேறுபடுத்துவதில் மகா சமாத்தியசாலி.

கபிரியேலின் ஒரே மகனும் அதே தொழிற்சாலையில் பேலிங் வேலை செய்திடுவான். படிப்பில் கவனம் குன்றிடமுதல் முதலாளியிடம் கெஞ்சிக் கூத்தாடி பேலிங் வேலைக்குச் சேர்த்து விட்டான். ஹூப் அயனை பேல்களுக்குள் நுழைத்து நூற்றம்பது கிலோ பேல்களைக் கட்டிப் பிணைத்தெடுப்பதில் தகப்பனுக்குச் சளைக்காத உழைப்பாளி. அதே தொழிற்சாலைக் குதத்தில் படுத்தெழும்புவான். மத்தியானத்தில் தகப்பனோடு ரொட்டியும் மரவள்ளியும் பகிர்ந்து கொண்டிடுவான். பேல்மெஷினில் விரல்கள் அகப்பட்டதில் இவனது மூன்று விரல்கள் நறுக்கப்பட்டே போயின.

ரொட்ரிகோ தும்புகளையே எரித்தழிக்க வேண்டும் என்றெல்லாம் ஆத்திரப்படுவான். அவனால் குடும்ப கஷ்டங்களை அத்தனை தூரம் தாங்க முடியாதிருந்தது.

கபிரியேலோ சோறுதரும் தெய்வமிது என்றெல்லாம் தொழிற்சாலைமேல் உயர் மதிப்புக்காட்டி ரொட்ரிகோபம் அடங்கும் வண்ணம் பரிவாக எடுத்துரைப்பான்.

விடிந்தும் விடியாத ஒரு காலையில் ரொட்ரிகோ தும்பு அடுக்குகளுக்கிடை வந்தபடி நோட்டமிட்டான். அக்கம் பக்கத்தில் எவருமிலர். இன்னமும் வேலைக்கு எவருமே வரவில்லை. பட்டென்று தீக்குச்சியைக் கிழித்து மூலையில் எறிந்தான். தும்புகளில் தீ பற்றத் தொடங்கியது.

விரல்களை இழந்த கபிரியேலின் மகன் தீவெளிச்சத்தைக் கண்டதுமே குளறியடித்து வாளித் தண்ணீரையும் ஃபயர் எக்ஸ்ரிங்கியூஸரையும் வாரியடித்து காலால் மிதித்து தீயை அணைக்க முயன்றான் அவனது குரல் கேட்டு பலரும் குழுமத் தொடங்கி விட்டார்கள். தீ பரவாமல் எல்லோருமே தடுத்து அணைத்தார்கள்.

''இது எங்கடை அம்மா இதைப்போய் எரிக்கிறியே''

சிறுவனின் தீரத்தால் தாக்குண்ட ரொட்ரிகோ தலை குனிந்தபடி ஒதுங்கினான். இதுவரை அவனுக்குள் சுவாலைவிட்டு பற்றி எரிந்து கொண்டிருந்த தீயை அணைத்திடுவதாக அவனது செய்கை அமையவில்லை.

ஆரோகணம் அவரோகணமாக மாறியது.

---

9ம் பக்கத் தொடர்ச்சி ... ...

இவ்வாறு சிந்திக்க வைக்கிறது இக்கதை. இதுவே இக் கதாசிரியரின் வெற்றி எனலாம்.

கதையின் முடிவில் கண்ணனின் உயிர்த்தியாகத்தைக் கதாசிரியர் இவ்வாறு கூறுகிறார் - (கண்ணனுக்கு) தர்ம அடி போட்டார்கள். தர்மம் அடிபட்டது.

'' ..அடித்து வெட்டிச் சிதைத்த, இரத்தத்தில் தோய்ந்த உயிரற்ற உடல்மட்டும் அங்கிருந்தது. உருத்தெரியாமல் மனிதம் சிதைந்திருந்தது. மதம் மட்டும் எங்கும் வியாபித்திருந்தது'' மதம் மனிதமாக மாறவேண்டும். இதுவே இக் கதையின் செய்தி. (Message)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக நோக்கில் திருமணம் - விவாகரத்து விளைவுகள்

- தொடர் -

மேல்மத்திய வகுப்பினரை (Middle upper class) எடுத்து நோக்கும்போது, இவர்களது வாழ்க்கைமுறை பணக்காரரை ஒத்ததாக இருப்பினும் இவர்கள் திருமண ஒப்பந்தத்தில் பலமாக இருப்பர். அதிகமாக சமூக சேவைகளில் ஈடுபடுவதால், மற்றவர்களுடன் நன்கு பழகும் வாய்ப்புக் கிடைப்பதால், கணவனை மனைவி அல்லது மனைவியைக் கணவன் தவறாகப் புரிந்துகொள்வதாலும் (Misu ler-standing) எரிச்சல் (envy) காரணமாகவும் குடும்பங்களில் பிளவுகள் ஏற்படுகின்றன. காரியாலயங்களில் அல்லது பொது இடங்களில் வேலைசெய்யும் மனைவியால் மட்டுமே சுமுகமான ஒரு சுதந்திரத்தைச் சுவைக்கச் சிலவேளைகளில் சந்தர்ப்பம் கிட்டுவதுண்டு. அடுத்ததாக, இந்தவகுப்பினரிடையே விவாகரத்துக்குக் காரணமாக அமைவது, தாம் உயர்நிலைக்கும், சமூக அந்தஸ்துக்கும் ஆசைப்பட்டு, கஷ்டப்பட்டுப் பணக்காரர்போல் நடிக்க முற்படுவதாகும். இவர்கள் தமக்கே உரிய நிலையை ஏற்றுக்கொண்டுவாழ முனைபவர்கள் அல்லர். ஆனால், மற்றவர்களைப் போல தாமும் வாழவேண்டுமென்று எத்தனிப்பவர்கள்.

மூன்றாவது வகுப்பினர் கீழ் மத்திய வகுப்பினர். (law middle class) காரியாலயங்களில் வேலை செய்து கிடைக்கும் சம்பளத்தைக்கொண்டு மரியாதையான வாழ்க்கை நடத்துபவர்கள். பரந்த மனப்பான்மையும் (Generosity) சகிப்புத்தன்மையும் கொண்டவர்கள். இவர்களிடையே திருமணமுறிவு குறைந்தளவில் காணப்படுகிறது. காரணம், கருத்து முரண்பாடிருந்தும் உண்மையான புரிந்துணர்வு கொண்டவர்கள். இவர்கள் மேல் மத்திய வகுப்பினரைப்போல வர முயற்சித்தாலும், தமது குடும்ப நிலையை உணர்ந்து தங்கள் குடும்ப மதிப்பை உயர்வாகக் கருதுபவர்கள். இவர்கள் பெறும் ஊதியம் எந்தவகையில் செலவழிக்கப்படுகின்றது



என்ற தவறான எண்ணத்தினாலேயே, சில பிரச்சினைகள் ஏற்பட்டு விவாக முறிவுகள் ஏற்படுவதுண்டு. மதுபோதையில் கணவன் தன் குடும்பத்தவருடன் சண்டையிடுவதாலும் மாமா, மாமி போன்றவர்கள் இக்குடும்பங்களின் சொந்த விடயங்களில் தலையிடுவதாலும் பல வீண் பிரச்சினைகள் உருவாகின்றன.

கீழ் வகுப்பினரைப் பொறுத்தமட்டில், விவாக முறிவுக்கு இன்னும் சில குடும்பப் பிரச்சினைகளும் இருந்தும், பணமின்மை அதாவது, வறுமையே முக்கிய காரணமாகும். சில குடும்பங்கள் சுயாதீனமாக வாழ்வதில்லை. பிறரிலே தங்கி வாழ்கின்றன. பொறுப்புணர்ச்சியற்ற தன்மையினால் தமது வாழ்க்கைபற்றிச் சிந்திப்பது வெகு குறைவு. ஏனோதானோ என்று வாழ்கின்ற மனப்பான்மையுடையவர்கள் இவர்கள். பெண்களுக்கு இத்தகைய சமூகத்தில் கொடுக்கப்படும் மதிப்பு மிகக்குறைவு. இதற்குப் பெண்கள் அதிகளவில் காணப்படுவதும் ஒரு காரணமாகும். வழக்கத்திற்கு மாறான விவாக சம்பந்தமான உறவுகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு காரணமாகக் கணவன் மனைவிக்கிடையில் பல சந்தேகங்கள் ஏற்பட்டுக் குடும்பம் பிரியும் சந்தர்ப்பமும் உண்டு. அதிகமானோர் குடிப்பழக்கத்திற்கு ஆளாவதால், . மனைவி, பிள்ளைகளைக் கவனியாது, குடும்பச் சொத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை விற்றுக் குடித்து ஒழிக்கின்றனர். அத்துடன் வேற்றுமையான மத அனுசரணை முறைகளும் திருமண முறிவுக்குக் காரணமாகின்றன.

இன்றைய வளர்ந்துவரும் சமுதாயத்தில் திருமணம் எதிர்நோக்கும் சவால்கள்:

குடும்பமானது சமுதாயத்திற்கு ஒரு அடிப்படை மூலமாகும். ஒரு குடும்பம் பிரச்சினைகளுக்குட்பட்டு, பிரிவுகள், பிளவுகள், பகை மன்னிக்காமை (Unforgiveness) போன்றன ஏற்படுவதைத் தவிர்ப்பதற்குக் குடும்பத்தில் நிலவும் உறவுமுறை மிக முக்கியமாகும். குடும்பத்தின் ஒன்றிப்பின் மூலம் நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கி, அன்பும், பாசமும், புரிந்துணர்வும் பிறப்பது இன்றைய கால கட்டத்தில் ஒரு தீவிர சவாலாக மாறுகின்றது. ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி வேறு, வேறு இடங்களுக்கு வேலைக்குச் செல்வதனால், தம் பிள்ளைகளுடன் அன்பாகக் கதைக்க, பழக கிடைக்கும் சந்தர்ப்பம் மிகக் குறைவு. இச்சந்தர்ப்பமின்மையானது தினமும் ஏற்படுவதால், கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளைகள் ஆகியோருக்கிடையிலான உறவு மங்கிய நிலையை எய்துகின்றது. உறவுகளைப் பலப்படுத்தும் சந்தர்ப்பங்கள் வரும் வரை காத்திராமல், அவற்றை உருவாக்க வேண்டும். இதற்குக் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் பங்களிப்புச் செய்யவேண்டும்.

திருமணம் இருவரை ஒன்றாக இணைந்து வாழ வழிவகுக்கிறது. சில சந்தர்ப்பங்களில் சில குடும்பங்கள் கொஞ்சக் காலத்திற்குக்கூட ஒன்றாயிருப்பது சாத்தியமற்றதாகும். எங்கு வேலைக்குச் சென்றாலும் தமது குடும்பம் பற்றிய சிந்தனை எப்போதும் இருக்கவேண்டும். "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான். மண்ணில் பிறக்கையிலே, பின் நல்லவனாவதும், தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே" என்பதுபோல, ஒரு குழந்தையின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவதில் திரியாக, எண்ணெயாக இருந்து ஒளிரச் செய்வது தாய். முக்கியமாக ஒரு குழந்தைக்குத் தேவை அன்பு. உரிய வேளையிலே, பெற்றோரிடமிருந்து அதற்கு அன்பு கிடைக்காவிட்டால், அக்குழந்தை வளர்ந்தவுடன் மற்றவர்களை அன்பு செய்யாது. காரணம், அன்பு என்பது என்னவென்று அதற்குத்தெரியாது. அத்தோடு மற்றவர்கள் மட்டிலே சகிப்புத்தன்மை, எரிச்சல், பகை கொண்டதாகவும் மாறிவிடமுடியும்.

எனவே, தாய் நற்பண்புகளைக் குழந்தைக்கு அதன் சிறுபராயத்திலிருந்தே கற்றுக் கொடுக்கவேண்டும். ஆனால், தமது குழந்தைகளுடன் செலவிடத் தாய்மாருக்கு நேரம் போதவில்லை. குழந்தைகட்கு ஊட்டப்படும் தாய்ப்பால் சில மாதங்களுடன் நிறுத்தப் பட்டுவிடுகிறது. குழந்தை பிறந்து 3 மாதங்களுக்குப் பிறகு தாய் வேலைக்குத் திரும்பச் செல்வதால், குழந்தையை மற்றவர்களின் கண்காணிப்பில் விடவேண்டியுள்ளது. ஒரு தாய் எவ்வளவு அன்பாக, அரவணைப்பாக வளர்ப்பாளோ, அவ்வாறு கண்காணிப்பாளரிடம் எதிர்பார்ப்பது முடியாத காரியம். இதனால் தாய் - சேய் உறவில் கீறல்கள் ஏற்பட்டு ஒரு குழந்தைக்குத் தாய் இருந்தும் உரிய அன்பும், பாசமும் கிடைக்காத ஒரு பரிதாபமான நிலையை அனுபவிக்கும் இத்தகைய குழந்தைகள் தீங்குசெய்யும் மனப்பான்மையும், சமூக விரோத நோக்கமும் உடையவர்களாக வளரச் சந்தர்ப்பம் உண்டு. மேலும், ஒரு சில குடும்பங்கள் பிறரின் உதவியோ, தொடர்போ இன்றித் தாமாகவே வாழ முற்படுவதால், அயலவர்களுடனான உறவு வலுவடைவது குறைவு. சில வேளைகளில் இத்தகைய குடும்பங்கள் ஏதாவது பிரச்சினைகளை எதிர்நோக்கும் போது, தமது பிரச்சினைகளைத் தாமாகவே தீர்க்கமுடியாமல் திண்டாடுவதும் உண்டு. இவைபோன்ற சவால்களை எதிர்கொள்ள கணவனும், மனைவியும் தயாராக இருப்பதுடன், அதில் வெற்றிகாண்பதும் மிக முக்கியமாகும்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைசொல்லும் விவிலியம்

# காக்கும் கடவுள்

★ செல்லத்துரை ஜெயராஜா

எசேக்கியா என்னும் அரசன் யூதேயா நாட்டை ஆண்டுவந்தான். இவன் மிகவும் நல்லவன். இஸ்ராயலரின் கடவுளாகிய ஒரே இறைவனை வழிபட்டு வருபவன். இவனுக்கு முன்பிருந்த அரசர்கள் வணங்கிவந்த சிலைகளையும் பலிபீடங்களையும் இடித்து, அழித்து அந்த வழிபாடுகளைத் தடைசெய்துவிட்டான் உண்மையான ஒரே இறைவனையே வழிபட்டதனால், அவரும் அந்த அரசனைக் காத்து வந்தார்.

அசீரிய அரசன் பெரும்படை பலமுள்ளவன், இதனால் யூதா நகர்கள் அனைத்துக்கும் எதிராகப் படையெடுத்து அவற்றைக் கைப்பற்றினான். எருசலேத்தைக் கைப்பற்றும் நோக்கில் பெரும்படையை அனுப்பிவைத்தான். எருசலேம் மிகச் சிறியது, இதனால் அதைப் போரிடாமலே கைப்பற்ற எண்ணி, எசேக்கியா அரசனின் தூதுவரை வரவழைத்து, யாரைநம்பி நீங்கள் எமக்கு எதிராகச் சண்டை செய்யப்போகிறீர்கள். எகிப்து நாட்டில் நம்பிக்கை வைத்தால் அதை நாணல்போல முறித்துப்போடுவோம். ''ஆண்டவர் இந்நகரை அசீரியரிடம் சரணடைய விடமாட்டார்'' என்று எசேக்கியா சொல்வதை நம்பவேண்டாம், சண்டையிட்டு மக்களை அழியவிடாமல் பணிந்துவிடச் சொல்லுங்கள் என்று தூது அனுப்பினான். இதைக் கேட்ட எசேக்கியா பயந்து, தனது ஆடைகளைக் கிழித்துக்கொண்டு, இறைவாக்கினர் எசாயாவிடம் ஆட்களை அனுப்பினார். நடந்தவற்றை அமைதியாகக்கேட்ட எசாயா இறைவாக்குரைத்தார், ''அசீரிய அரசன் எம்மை இழிந்துரைத்தமைக்கு நீ அஞ்சாதே. இதோ ஆவியை அனுப்பி அவன் வதந்தியைக் கேட்குமாறு செய்வோம், அவனும் நாட்டுக்குத் திரும்பிச்செல்வான், அங்கே அவன் வாளுக்கு இரையாவான்'' என்று சொன்னார்.

இப்படியிருக்க, கடவுளின் திருவுளப்படி ''அசீரிய அரசனுக்கு எதிராக எத்தியோப்பிய அரசன் போருக்குப் புறப்பட்டுவிட்டான்'' என்ற வதந்தியைக் கேட்டு, அசீரியப்படை எருசலேமைவிட்டுப் புறப்பட்டது. ஆனாலும் எசேக்கியா அரசனுக்குக் கடிதமூலம் ''நாங்கள் திரும்பிவந்து, உனதுநாட்டை அடிமைப் படுத்துவோம்'' என்று மிரட்டிவிட்டே அகன்றனர். அதைப்படித்த எசேக்கியா ஆண்டவரிடம் அழுது, புலம்பி, மனதுருக மன்றாடினான். அப்போது இறைவாக்கினர் எசாயா ஆவியால் நிறையப்பெற்று இறைவாக்குரைத்தார். நீண்ட உரையின் இறுதியில் ''அசீரிய மன்னன் இந்த நகருக்குள் நுழையமாட்டான், வந்த வழியே திரும்பிச் செல்வான், நாம் இந்த நாட்டைக் காப்போம்'' என்ற ஆண்டவரின் வாக்கை உரைத்தார்.

எசேக்கியா அரசன் இதைக்கேட்டுச் சமாதானம் அடைந்தாலும், அசீரிய அரசனைப்பற்றிய பயம் அவன் மனதிலிருந்து முற்றாகப் போகவில்லை. அப்படியிருக்கும் போது ஆண்டவரின் தூதர் புறப்பட்டுச் சென்று அசீரியரின் பாசறையிலிருந்த ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் படைவீரரைச் சாகடித்தார். காலையில் விழித்தெழுந்து பார்த்த அசீரிய மன்னன், பெரும்படை பிணமாகக் கிடப்பதைக் கண்டு பயந்து, அங்கிருந்து நினிவே சென்று தங்கியிருந்தான். ஒருநாள் அவன், நிஸ்ரோக்கு என்னும் அவனுடைய தெய்வத்தை வழிபட்டுக்கொண்டிருக்கும்போது, அவனுடைய சொந்தப் புதல்வர்களாலேயே வெட்டிக்கொல்லப்பட்டான். இதைக் கேள்விப்பட்ட எசேக்கிய அரசன், பயம் நீங்கியவனாக, சமாதானம்பெற்று, இறைவனுக்கு நன்றி செலுத்தினான்.

அன்பான பிள்ளைகளே! இந்தக் கதையின் மூலம் ஆண்டவர் தம்மை நம்பியவர்களை ஒருபோதும் கைவிடாமல் காக்கும் கடவுளாக இருப்பதைப் படிக்கிறோம். பிள்ளைகளாகிய நீங்களும் பரம தந்தையாகிய நம் ஆண்டவரில் நம்பிக்கை வைத்தால், அவர் என்றும் உங்களைக் காப்பாற்றுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவடுகள்

## தூய டொமினிக் சாவியோ

★ மெற்றில்டா

ஸ்பெயின் நாட்டிலே வாழ்ந்த பணக்காரக் குடும்பமொன்றிலே அவதரித்தவர்தாம் புனித டோமினிக். இவர் தம்மைத் துறவறத்திலே இணைத்துக்கொண்டார். குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டுச் சில ஆண்டுகள் கடந்ததும், ஆயர் அவர்கள் இவரைத் தம்மோடு அழைத்துக்கொண்டு தென் பிரான்சுக்குச் சென்றார். அங்கிருந்த திருச்சபையின் நிலையானது மிகப் பயங்கரமாக இருந்தது. திருச்சபை கற்பித்த படிப்பினைகளுக்கு எதிரான சமயபேதங்களையும், எதிரான கருத்து மாறுபாடுகளையும், விஞ்ஞான சித்தாந்தங்களையும் அங்கு காணமுடிந்தது. இந்நிலைமையைக் கண்டு டோமினிக் தன் போதனைகளை அங்கே ஆரம்பிக்க வேண்டியிருந்தது.

இங்கு காணப்பட்ட பிழையான கற்பித்தலை ஏற்கமுடியாத பலர், திருச்சபையிலிருந்து விலகிய ஆபத்தையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எனவே, டோமினிக் பிரான்சிலேயே தொடர்ந்தும் தங்கியிருந்து விசுவாசத் தளர்ச்சியிலிருந்து மக்களைத் திரும்பவும் மீட்டெடுக்கவும், போதகம் செய்யவும் தமது வாழ்வை அர்ப்பணிக்கத் தீர்மானித்தார். இவர் ஆன்மாக்களின் ஈடேற்றத்தில் கொண்ட ஆர்வத்தைப் பிரதிநிதித்துவப்படுதுதற்காகவே இவரது திருஉருவப் படத்தில் ஒரு நாய் தீப்பந்தம் தாங்கி நிற்பதுபோன்று இடம் பெற்றுள்ளது.

இவர் ரோமை நகர் சென்று மறைபரப்புதலையும், பிரசங்கித்தலையும், பணிகளாகக் கொண்டதொரு சபையை உருவாக்க விரும்புவதுபற்றிப் பரிசுத்த பாப்பரசரிடம் பேசினார். இச்சபை டொமினிக்கன் சபை அல்லது பிரசங்கிகள் சபை என அழைக்கப்பட்டது.

ஒருமுறை இவர் தமது பணிகள் மந்தகதியில் நடைபெறுவதையுணர்ந்து சோர்ந்துபோனார். தேவதாய் அவ்வேளையில் அவருக்கு அழகிய ரோஜா மலர்களாலான, மலர் வளையமொன்றுடன் காட்சியளித்தார். அவர் டோமினிக்கை நோக்கி ஒவ்வொரு நாளும் தவறாது செபமாலையை ஓதுமாறும், மக்களுக்கும் அதனைக் கற்பிக்கும்படியும் கூறினார். அன்னையின் வேண்டுகோளை உற்சாகத்துடன் நிறைவேற்றினார் டோமினிக். என்ன அதிசயம்! அவர்பணி சிறந்தது. விரைவிலேயே அங்கு காணப்பட்ட மறைபேதகமானது மறையத் தொடங்கியது,

இவர் 1221ம் வருடத்திலே இறைபதம் சேர்ந்தார். அருட்கன்னியருக்கான ஒரு துறவறச்சபையும் இவரால் உருவாக்கப்பட்டது. இளம் பெண்களைக் கவனிக்கும் ஒரு சபையாக இது அமைந்திருந்தது.


புனித டோமினிக்கின் முன்மாதிரிகையான நற்குணங்கள், போதனைகள் மூலம் இறைவன் மகிமை பெற்றார். நாமும் அவரது வேண்டுதல்கள் மூலம் நற்பயன் பெறவும் திருச்சபை தன் ஆன்ம வாழ்வில் முன்னேறவும் வரமீந்திட இறைவனை இறைஞ்சுவோம்.

வானவியல் அறிஞர்கட்கான பாதுகாவலராக இவர் திருச்சபையால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை-இலக்கிய மஞ்சரி



## 'விடைகொடு தாயே'

நீண்ட நாட்களுக்குப்பின் நெஞ்சுக்கு நிறைவைத் தந்த ஒரு நாட்டிய நாடகத்தைப் பார்க்க முடிந்தது. வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் அனுசரணையுடன் புகழ் பெற்ற ஆடற்கலை வல்லுநர் வேல் ஆனந்தன் அவர்களின் நெறியாள்கையில் மட்டக்களப்பு ஆடலணியினர் 'விடைகொடு தாயே' நாட்டிய நாடகத்தை நிகழ்த்தினர்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி கலையரங்கத்தில் ஆகஸ்ட் 7, 8 ஆகிய இரு நாட்களிலும் நடைபெற்ற நாட்டிய நாடகத்தை முதல் நாள் காணும் வாய்ப்புக் கிடைத்தது.

பாரதக் கதையில், கர்ணனின் வாழ்வில் இடம்பெற்ற முக்கியமான சில சம்பவங்கள் நாட்டிய நாடகத்துக்கான கதையாகத் தொகுக்கப்பட்டிருந்தன. பாண்டவருக்கும், துரியோதனனாதியர்க்கும் போர் நடைபெறுவதற்கான முனைப்புக்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்த சூழ்நிலையில் பாண்டவர் வெல்வதற்கான திட்டங்களைத் தீட்டிய கண்ணன், அதன் ஓர் அங்கமாக கர்ணனை தந்திரமாக வெல்லும் நோக்கோடு அன்னையான குந்திதேவியைச் சந்திப்பதோடு நாட்டிய நாடகம் ஆரம்பிக்கிறது. கர்ணனும், குந்திதேவியும் சந்திக்கும்போது கர்ணன் நினைவுகளை மீட்டுவதன்மூலம் நாடக நிகழ்வுகளை நடத்திச் செல்வது நல்ல உத்தி.

கர்ணன் பற்றிய கதையின் முக்கியமான பகுதிகளைத் தெரிந்தெடுத்து இறுக்கமாகத் தொகுத்ததன் மூலம் தொய்வின்றி நாடகம் நிகழ்த்தப்பட்டது. அனைவருக்கும் தெரிந்த கதையாதலால் புரிந்து கொள்வதில் சிரமம் எதுவும் இருக்கவில்லை. பாத்திர அமைப்புகளும் சிறப்பாக, கண்ணன், குந்திதேவி, கர்ணன் போன்ற பாத்திரங்களும், ஒப்பனையும் பிரமாதமாக அமைந்திருந்தன. நடனமும், பாட்டும், பாத்திரங்களின் உணர்வுகளையும் கதைப்போக்கையும் நன்றாக வெளிப்படுத்தின.

பாடல்களுக்கான இசை அமைப்பு சங்கீதபூஷணம் திரு. ஜீவம் ஜோசப். பாடல்களின் மெட்டும் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் ஒலிக்குறிகளும் மிகப் பொருத்தமாய் அமைந்திருந்தன. கீழ்ஸ்தாயியில் பாடல்கள் பாடியபோது வார்த்தைகள் தெளிவில்லை. பாடியவர்கள் இன்னும் மெருகேற்றிப் பாடியிருக்கலாம்போல் தோன்றியது. பெண்குரல் அவ்வப்போது சுருதிவிலகியும் ஒலித்தது. வாத்தியங்கள் இன்னும் கனதியாக ஒலித்திருந்தால் காட்சிதரும் உணர்வுகள் இன்னும் ஆழமாகத் தொட்டிருக்கும். ஒலி அமைப்பும் சரியாகக் கைகொடுக்கவில்லை. பாட்டையும் இசையையும் அவ்வப்போது அடக்கியும் அலறவைத்தும் காதுக்குச் சலிப்பேற்றி விட்டது. அரங்க நிகழ்வுகளின் வெற்றியில் பாதி ஒலி அமைப்புக்கு உரியது. அதில் சம்பந்தப்பட்டவர்கள் அக்கறை காட்ட வேண்டும்.

பெரும்பான்மையான நூற்றுவரிடம், சிறுபான்மையான ஐவர்கள் தமக்குரிய நிலங் கேட்டுப் போராடிய கதை நாட்டின் நடைமுறை யதார்த்தத்தின் குறியீடாக நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இலக்கியப் பேரவையின் இலக்கியப் போட்டியில் (95/96) ஐந்து மட்டுநகர் நூல்களுக்குப் பரிசு

யாழ். இலக்கியப் பேரவை நடாத்திய 1995, 1996ம் ஆண்டுகளுக்கான சிறந்த நூல்கள் தெரிவுப் போட்டியில் மட்டக்களப்பு எழுத்தாளர்களின் ஐந்து நூல்களுக்குப் பரிசு கிடைத்துள்ளது. விபரம் வருமாறு;

**பரிசுக்குரிய நூல்கள்**

1. வரலாறு - ''மாகோன் வரலாறு''
   செல்வி க. தங்கேஸ்வரி
   (அன்புவெளியீடு - மட்டுநகர்)

2. காவியம் - ''கிறீஸ்து காவியம்''
   வாகரை வாணன்.

3. சிறுவர் இலக்கியம் ''மாயக்கிழவி''
   ஒ. கே. குணநாதன்

**சான்றிதழ்பெறும் நூல்கள்**

4. இதயப் பூக்கள்
   கவிஞர் செ. குணரத்தினம்

5. வாழ்க்கைச் சுவடுகள்
   எஸ். பிரான்சிஸ்
   (அன்புவெளியீடு மட்டுநகர்)

## ஆஸ்திரிய நாட்டு கர்தினால் இலங்கை விஜயம்

ஆஸ்திரிய நாட்டுக் கர்தினாலும் வியன்னா நகரப் பேராயருமான கிறிஸ்டோஃப் ஸ்ஜான்போர்ன் கடந்த மாதம் இலங்கைக்கு வந்திருந்தார். இலங்கை கத்தோலிக்க ஆயர்களின் அழைப்பை ஏற்றுவந்த அவர் இருவாரங்கள் தங்கியிருந்து பல இடங்களுக்கும் சென்று இங்கு நிலவும் சூழ்நிலையை அறிந்து கொண்டார்.

இலங்கை ஆயர்களுடனான சந்திப்பின்போது இங்கு நிலவும் இனப்பிரச்சினைக்கு சமாதானமான ஒரு தீர்வை கொண்டுவரும் முயற்சியில் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை ஆற்றிவரும் பங்களிப்பு தொடர்பாக மகிழ்ச்சியைத் தெரிவித்ததுடன் இம்முயற்சிகள்வெற்றியளிக்க இறை ஆசீரையும் வேண்டினார்.

20ம் பக்கத் தொடர்ச்சி ... ... ...

குண்டு வெடிப்புகளும், துப்பாக்கி வேட்டுகளுக்கும் மத்தியில் அலைக்காற்றுக் கலைகளூடாக நெஞ்சைக் குளிர்வித்த மட்டக்களப்பு ஆடலணியினருக்கும் அவர்களை ஆடவைத்த, கலைஞர்களைப் பாடவைத்த வேல் ஆனந்தன் அவர்களுக்கும் பாராட்டுகளைத் தெரிவிப்பது நமது கடமை.

— திருமூலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உலகம் - கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சி வெள்ளி விழா ஆண்டில்

# ஆயிரமாவது மலர் நிறைவு

இலங்கை வானொலி தேசிய சேவையில் ஒன்றுவிட்ட ஒரு ஞாயிறு, மாலை 7-00 மணிக்கு ஒலிபரப்பாகிவரும் புதிய உலகம்-கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சி வெள்ளி விழா ஆண்டில் நடைபோடுவதோடு இம் மாதம் (செப்டம்பர்) 19ம் திகதி ஒலிபரப்பாகும் நிகழ்ச்சியுடன் ஆயிரமாவது மலரை நிறைவு செய்வது குறிப்பிடத்தக்கது.

உலகில் எந்தநாட்டிலும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஒலிபரப்புகளில் இல்லாத அளவுக்கு இலங்கை வானொலியில் சமய நிகழ்ச்சிகளுக்கு அதிகளவு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி கிறீஸ்தவகத்தோலிக்க நிகழ்ச்சிகளும் நீண்ட காலமாகவே ஒலிபரப்பாகி வருகின்றன. ‘சென்று போதியுங்கள்’ என்னும் இயேசுவின் வாக்கை தனது இலட்சியமாகக்கொண்டு, இரண்டாயிரம் ஆண்டுகளாக நற்செய்தியை அறிவித்துவரும் திருச்சபை, செல்லமுடியாத இடங்களுக்கும், பரந்துபட்ட மக்கள் கூட்டத்துக்கும் மிகவிரைவாகச் சென்றடையக்கூடிய வெகுஜனத் தொடர்பு சாதனங்களைக் கையாண்டு நற்செய்தியை அறிவிப்பதி லேபேரார்வம் கொண்டுள்ளது. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டிலே சமூகத் தொடர்புக் கருவிகளுக்கு என ஒரு கொள்கைத் திரட்டு உருவாக்கப்பட்டுள்ளதை இங்கே கவனத்திற் கொள்ளவேண்டும். அதுமட்டுமன்று வெகுஜனத்தொடர்பு சாதனங்களான வானொலிக்கென்று உண்டா (UNDA) சினிமாவுக்கென்று ஓ.சி.ஐ.சி. (O. C. I. C.) பத்திரிகைக்கென்று யூசிப் (UCIP) என அனைத்துலக அமைப்புக்களை நிறுவி இயக்கிவருகிறது. இவ்வமைப்புக்கள் தலத்திருச்சபைகளுக்கும் நிதி உதவிகளை வழங்கி நற்செய்திப் பணிக்கும், சமூக, கலை, கலாசார மேம்பாட்டுக்கும் சமூகத்தொடர்புக் கருவிகளைப்பயன் படுத்தவும், அதுபற்றிய அறிவை வளர்க்கவும், அது தொடர்பான நிறுவனங்களை உருவாக்கவும் உற்சாகமும் ஒத்துழைப்பும் உதவியும் நல்கிவருகின்றன. ஆயினும் தலத் திருச்சபைகள் இத்துறையில் எந்தளவுக்கு ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளன. இவற்றை வளர்க்க, மேம்படுத்த முனைகின்றன என்பது கேள்விக்குரியது.

இன்று நவீன தொழில் நுட்பத்தின் காரணமாக தொடர்பு சாதனங்கள் அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டு வருகின்றன. தனிமனித வாழ்விலும், சமூக வாழ்விலும் இவற்றின் தாக்கங்கள் மிக அதிகமாகவே தென்படுகின்றன. வல்லரசுகள் முதல் வர்த்தக நிறுவனங்கள்வரை தமது நடவடிக்கைகளை வலுப்படுத்தவும், விரைவாக்கவும், விரிவுபடுத்தவும், விலைப்படுத்தவும் தொடர்புக் கருவிகளையே மூல பலமாகக் கொண்டுள்ளன இன்று உலக நடப்புகள் அனைத்தையும் அன்றாட வாழ்வையும் நெறிப்படுத்துவதும், கட்டி ஆள்வதும் தொடர்புசாதனங்களே. ஒருவகையில் தொடர்புசாதனங்கள் மனித வாழ்வை ஆக்கிரமித்துள்ளன என்பது பொருந்துவதாகும். ஆகவே, மனித வாழ்வில் அக்கறை கொண்டுள்ள திருச்சபை உலகை வியாபித்து நிற்கும் தொடர்பு சாதனங்கள் பற்றி அக்கறையின்றி அலட்சியமாக இருக்க முடியாது.

இன்று உலகில் விஷ்வரூபம் பெற்று வளர்ந்துவரும் முதலாளித்துவ பொருளாதாரக் கோட்பாடுகள், குறிப்பாக உலக மயமாக்கல், தாராள மயமாக்கல் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார நடவடிக்கைகள் சந்தைப் பெருக்கத்திற்கும், சுரண்டலுக்கும் ஏதுவாக நுகர்வுக் கலாசாரத்தை வளர்க்கவும், இனங்களின் பன்முகத் தன்மையைச் சிதைத்து, புராதன மொழிகளை, கலாசாரங்களை அழிக்கவும் முனைகின்றன. இதற்கு தொடர்பு சாதனங்களே பெரிய அளவில் கையாளப்படுகின்றன. இது உண்மையில் மறைமுகமாக இடம்பெறும் ஒரு மனித உரிமை மீறலாகும். வளர்ந்த நாடுகளின் இத்தகைய சுரண்டல் நடவடிக்கைகளுக்கு மிகவும் பழமையான மொழிகளையும் கலாசாரப் பெறுமானங்களையும் கொண்டுள்ள ஆசிய, ஆபிரிக்க நாடுகள், மற்றும் வளர்முக நாடுகள் நிர்ப்பந்தங்கள் காரணமாகப் பணிந்துபோவது பெருங்கொடுமை. இதற்கு உள்நாடுகளில் உள்ள முதலாளித்துவ சக்திகளும், பங்குதாரர்களும், பெருந்தொழில் அதிபர்களும் துணை நிற்கிறார்கள். பெரும்பாலும் இவர்கள் ஊடாகவே சர்வதேச சுரண்டல்காரர்கள் இங்கே தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்துகிறார்கள். பொதுமக்களுடான இவர்களுடைய தொடர்புகள் பெரும்பாலும் தொடர்பு சாதனங்களுடாகவே நடைபெறுகின்றன. சாதாரண மக்களை கவர்ச்சியான ஒரு கனவு வாழ்வை நோக்கி தள்ளிச் செல்வதன் மூலம் உள்நாட்டு வளங்களை இவர்கள் அள்ளிச் செல்லுகின்றனர். இது காலப் போக்கில் ஒரு வலிமையான வல்லரசாதிக்கத்துக்கும் நிரந்தரமான அடிமைத்தனத்துக்கும் கொண்டுசெல்லும் என்பது திண்ணம்.

மானுடத்தின் விலங்கொடித்து புது உலகு காணப் புறப்பட்ட கிறீஸ்துவின் திருச்சபை மானுடத்தை அடிமைப்படுத்தும் சக்திகளுக்கு எதிராக எப்போதும் போராடியே வந்துள்ளது. இன்றும் அரசியல், சமூக, கலை, கலாசார ஒழுக்கம் சார்ந்தவற்றை சீரழிக்கும் முதலாளியப் போக்குக்கெதிராக போராட வேண்டிய கடப்பாடு கிறீஸ்துவின் திருச்சபைக்குண்டு. தொடர்பு சாதனங்கள் அதற்கு அவசியமான ஒரு கருவியாக உள்ளன. ஆகவே, தொடர்புசாதனங்கள் மீது, அவற்றை மேலும் அறிவதில், பயன்படுத்துவதில், மேம்படுத்துவதில் அதிக அக்கறைகாட்ட தலத் திருச்சபைகள் முன்வரவேண்டும்.

## கத்தோலிக்க நிகழ்ச்சிகள்

இப்போதுள்ள இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இலங்கை வானொலியாக உருவான காலத்திலிருந்தே கத்தோலிக்க நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகி வருகின்றன. அவ்வகையில் இலங்கை வானொலியில் கத்தோலிக்க நிகழ்ச்சிகளுக்கு ஏறத்தாள முக்கால் நூற்றாண்டு கால வரலாறு உண்டு. ஆனாலும் ஆரம்பித்த காலம் முதல் 1970பதுகள் வரை புதிய உலகம் என்ற பெயரிலோ இப்போதுள்ள வடிவத்திலோ கத்தோலிக்க நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகவில்லை.

இலங்கை வானொலியும் கத்தோலிக்க திருச்சபையும் ஏற்படுத்திக்கொண்ட ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் காலத்துக்குக் காலம் ஒரு குருவானவரை கத்தோலிக்க நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாக திருச்சபை நியமித்தது. அவர் கொழும்பு நகரில் தங்கி இருந்து அட்டவணையின்படி நிகழ்ச்சிகளை (வளர்ந்தோர் 30 நிமிடம். சிறுவர் 15 நிமிடம், நற்சிந்தனைகள் 5 நிமிடம்) மறைமாவட்ட அளவில் சமூகத் தொடர்பு இயக்குனர்கள் ஊடாகப் பகிர்ந்து கொடுத்தார். மறை மாவட்டங்களிலிருந்து செல்லும் கலைஞர்கள் நேரடியாக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்குச் சென்று ஒலிப்பதிவு செய்தனர் இக்காலப் பகுதிகளில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கிறிஸ்தவ நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களாக பெரும்பாலும் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களே கடமையாற்றினர் இவர்களுக்குக் கிறிஸ்தவக் கொள்கைகள், படிப்பினைகள், நடைமுறைகள் பற்றி தெரிந்திருக்க நியாயமில்லை. கொண்டு செல்வதை மேலோட்டமாகப் பார்த்து ஒலிப்பதிவு செய்து ஒப்பேற்றினர். இக்காலப்பகுதியில் கத்தோலிக்க நிகழ்ச்சி என ஒன்று ஒலிபரப்பாகிறது என்பதே பலருக்குத் தெரிந்திருக்கவில்லை. அதன் தரமென்ன, கூறும் பொருளென்ன, வடிவம் என்ன என்று கேள்விகளும் எழவில்லை. பங்குபற்றியவர்கள் தம் குரல்களை வானொலியில் கேட்டு திருப்தி அடைந்தார்கள். பெரும்பாலும் விவிலிய வழிபாடு போன்றே நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவே கிறிஸ்தவ நிகழ்ச்சியின் வடிவம் என்பது எழுதப்படாத மரபுபோல் கிறிஸ்தவ வானொலி நிகழ்ச்சிகள் விளங்கின.

## வந்தது மாற்றம்

1970 பதுகளின் முற்கூறில் ஏற்கனவே கூறியதுபோல் 'பகிர்ந்தளிக்கும் பணி'க்கு யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருள் தந்தை சா. ம. செல்வரட்ணம் O. M. I. அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். சிறிதுகாலம் பகிர்ந்தளிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த செல்வரட்ணம் அடிகள், ஆக்கத்திறன் உள்ள சிந்தனையாளர். சொல்வன்மை மிக்கவர். சமூக உணர்வும், மொழிப்பற்றும் நிரம்பியவர். தமிழ்நாடு பச்சையப்பன் கல்லூரிப் பட்டதாரி. கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகளுக்கு ஒரு மாற்றம், மறுசீரமைப்பு தேவை என்பதை உணர்ந்து கொண்டார் அவர். அந்த மாற்றத்துக்கான திட்டங்களைத் தீட்டி செயலாக்கியதன் வடிவமே 'புதிய உலகம்' நிகழ்ச்சியின் தோற்றமாகும்.

கத்தோலிக்க வானொலிநிகழ்ச்சிக்கென்று ஒரு பெயர், ஒரு நோக்கம் தேவை என்பதை உணர்ந்துகொண்ட 'அவர் உள்ளத்தின் ஆழத்தில், சிந்தனையில் புதிய உலகம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற நோக்கோடு கத்தோலிக்க நிகழ்ச்சிக்குப் புதிய உலகம் என்று பெயரிட்டோம்' என தமது நோக்கத்தையும் பெயருக்கான காரணத்தையும் பிற்காலத்தில் அவரது வானொலி உரைகளின் தொகுப்பாக வெளிவந்த 'காற்றில் கலந்தவை' நூலுக்காக எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

1975ம் ஆண்டு ஜெனவரி மாதம் முதல் கத்தோலிக்க நிகழ்ச்சி புதிய உலகம் என்னும் பெயரில் வடிவம்மாறி சஞ்சிகை நிகழ்ச்சியாக தொகுப்பு நிகழ்ச்சியாக வலம்வரத் தொடங்கியது. அருள்தந்தை சா. ம. செல்வரட்ணம் 'கரவையூர்ச் செல்வம்' என்னும் புனை பெயரை அணிந்துகொண்டு புதிய சிந்தனைகளை தேன்தமிழில் காற்றில் கலக்கவிட்டார். இம்முயற்சிகளுக்கு மேலும் துணை சேர்ப்பதுபோல் இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை தேசிய சமூகத் தொடர்பு நிலையம் ஒன்றை கொழும்புநகரில் நிறுவியது. இங்கு நவீன ஒலிப்பதிவு கூடம் ஒன்றும் அமைக்கப்பட்டது. இதுவே கத்தோலிக்க சமூகத்தொடர்புத் துறையின் தலைமையகமாகவும் அமைந்தது. இதன்பின் எமது கலையகத்திலே நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்யவும், தொகுக்கவும் (Editing) கலவைகள் (Mixing) செய்யவும் வாய்ப்பு உண்டாயிற்று. இதன் காரணமாக நிகழ்ச்சியின் ஒலிப்பதிவுத்தரம் மேலும் உயர்ந்தது. தூர இடங்களிலிருந்து வரும் கலைஞர்கள் தங்குவதற்கு இடம்தேடி அலையாது தங்கிச் செல்லவும் வசதி கிடைத்தது.

கத்தோலிக்க நிகழ்ச்சி புதிய உலகம் என்ற பெயரில் தொகுப்பு நிகழ்ச்சியானதும் 30 நிமிட வளர்ந்தோர் நிகழ்ச்சியில் 15 நிமிடங்களே மறை மாவட்டக் கலைஞர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. மிகுதி பதினைந்து நிமிடங்களும் உரைகள், பாடல்கள், செய்திகள், அறிவிப்புகள், பேட்டிகள், விமர்சனங்கள் என பல்சுவை அம்சங்களோடு நிலையத்தால் தயாரிக்கப்பட்டன. இதன் காரணமாக கத்தோலிக்க நிகழ்ச்சிகள் ஏனைய நிகழ்ச்சிகளின் தரத்துக்கு உயர்ந்ததோடு பரந்த நேயர் வட்டத்தையும் உருவாக்க முடிந்தது. அவர்களில்

கத்தோலிக்கரும் இருந்தனர்.<br>
கிறிஸ்தவர்களும் இருந்தனர்.<br>
கிறிஸ்தவர்கள் அல்லாதோரும்<br>
இருந்தனர்.<br>
உள்நாட்டிலும் இருந்தனர்.<br>
வெளிநாட்டிலும் இருந்தனர்.

இவ்வாறு கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சியை நேயர்கள் விரும்பும் வண்ணம் வடிவமைத்து வளர்த்துவிட்ட பெருமை அருள் தந்தை சா. ம. செல்வரட்ணம் (கரவையூர் செல்வம்) அவர்களுக்கே உரியது.

## தொடரும் மாற்றம்

புதிய உலகத்தை அவதானிப்புக்குரிய ஒரு நிகழ்ச்சியாக வளர்த்துவிட்ட கரவையூர்ச் செல்வம் அவர்கள் நான்கு ஆண்டுகளின்பின் 1979ம் ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்புகளிலிருந்து விடுபட்டார். உயர் கல்விக்காக வெளிநாடு செல்லவிருந்த அவர் எம்மை அழைத்து தாம் பெற்று வளர்த்த குழந்தையை சீராக வளர்க்கும் பொறுப்பை மிகுந்த நம்பிக்கையோடு எம்மிடம் ஒப்ப டைத்தார். கடந்த காலங்களில் பல வானொலி நிகழ்ச்சிகளை நாம் தயாரித்த போது அவருக்கு எம்மிடம் ஏற்பட்ட நம் பிக்கை ஒரு பெரும் பொறுப்பை எம்மிடம் கையளிக்கும் எண்ணத்தை அவருக்குத் தந் திருக்க வேண்டும்.

1982ம் ஆண்டு அவர் வெளிநாட்டில் கல்வியை முடித்து வந்தபோது புதிய உலகம் நேயர்களுக்காக அவரைப் பேட்டி கண்டேன் அப்போது அவர் சொன்னார், 'இங்கு பலரும் சொன்னார்கள், மலர்வேந்தன், உங்களைப் போல் நன்றாகவே செய்கிறார். உங்களை விடவும் நன்றாகச் செய்கிறார் என்று, இதைக் கேட்க, எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந் தது. என்று கூறினார். கரவையூர்ச் செல்வம் அவர்களின் இந்த வார்த்தைகள் எனக்குச் சொல்லமுடியாத ஒரு நிறைவை, திருப்தி யைத்தந்தது.

## இடம்மாறிய புதிய உலகம்

1983ம் ஆண்டு இலங்கை நாட்டின் வர லாற்றில் மறக்க முடியாத ஆண்டு. இனவன் முறை தன் கோரமுகத்தை இந்நாட்டில் ஆழப்பதித்த ஆண்டு. அதன் விளைவுகளை இன்னும் இந்தநாடு அறுவடை செய்துகொண் டிருக்கிறது. அதுவரை காலமும் கொழும்பி லிருந்து புதிய உலகத்தை தயாரித்துவந்த எம்மை, நடைபெற்ற இனக்கலவரம் இருப் பிடத்திலிருந்து விரட்டி அடித்தது. ஆயிர மாயிரம் அப்பாவித் தமிழர்களுக்கு ஏற்பட் டதுபோலவே நாமும் விரட்டப்பட்டோம். அகதி முகாமில் தஞ்சம் புகுந்து, அங்கிருந்து மூட்டை முடிச்சுகளுடன் மட்டக்களப்புக்கு வந்திறங்கினோம். அப்போதும் சிறிதுகாலம் பொறுத்து கொழும்புக்குச் செல்வதே நோக் கம். ஆனால் கடவுளின் திட்டம் வேறாக இருந்தது. அது திருகோணமலை - மட்டக் களப்பு ஆயர் பேரருள் தந்தை ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் மூலமாக வெளிப்பட்டது. "கொழும்பில்நாம் எவ்வளவு காலத்துக்குத் தங்கி இருப்பது இங்கிருந்தே நிகழ்ச்சிகளைத் தயாரிக்கலாம். ஒலிப்பதிவுக் கலையகம் ஒன்றையும் உருவாக்குவோம்" என்று கூறிய ஆயரின் ஒத்துழைப்பாலும் அப்போது திரு/மட். மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலைய இயக்குனராயிருந்த அருள் தந்தை C. P. இராஜேந்திரம் அவர்களின் கடின உழைப்பாலும் ஒலிப்பதிவுக் கலைய கம் ஒன்று உருவானது. அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பிலிருந்தே 'புதிய உலகம்' உரு வாகத் தொடங்கியது. நாட்டில் நிலவிய இக் கட்டான சூழ்நிலையில் ஒரு தேசியப் பணியை மறைமாவட்ட அளவில் பொறுப்பெடுத்து, அதற்கான வளங்களையும் தந்து வழிகாட்டி நின்ற பேரருள் தந்தை ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களுக்கு நாம் நெஞ் சார்ந்த நன்றி கூறுகிறோம்.

புதிய சூழலில் புதிய உலகம் மேலும் மெருகேறியது. புதிய அம்சங்கள், புதிய கலைஞர்கள் "புதிய உலகத்தை" வளர்த் தன. 'தரமான ஒலிப்பதிவு நன்றாகச் செய் கிறீர்கள்' என்ற பாராட்டு ஒலிபரப்புக் கூட் டுத்தாபனத்திலிருந்து கிடைத்தது. அதற்குக் காரணமான எமது தொழில்நுட்பவியலாளர் கள் திரு. வள்ளுவன் சுவாமிநாதன் அவ ரைத் தொடர்ந்து திரு. யேசுதாஸ் இரா ஜேந்திரா இருவரும் புதிய உலகத்தின் தர மான வடிவத்துக்கு கைகொடுத்தவர்கள்.

வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பு ஒரு தேசியப்பணி. அது மட்டக்களப்புக்கு மட்டும் உரியதல்ல. அது மட்டக்களப்பிலிருந்து தயா ரிக்கப்பட்டாலும் பிறமாவட்டக் கலைஞர் களும் பங்குகொள்ள உரிமையுண்டு, வாய்ப் பும் உண்டு. அவ்வப்போது பிற மாவட்டங் களிலிருந்தும் கலைஞர்கள் வந்து பங்குகொள் ளுகின்றனர். ஆயினும் நாட்டில் நிலவும் போக்குவரத்துத் தடைகள், பாதுகாப்புப் பிரச்சினைகள் பிறமாவட்டக் கலைஞர்களின் வருகையை அதிக அளவில் பாதித்துள்ளது. நிலைமைகள் சீரடையும்போது பலரும் பங்கு கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய உலகம் 25 ஆண்டுகளைக் கண்டிருக்கிறது, ஆயிரம் மலர்களைக் காற்றில் கலந்திருக்கிறது என்றால் அது தனிமனிதச் சாதனையயல்ல. பலரது கூட்டு முயற்சி, பலரது ஒத்துழைப்பின், அர்ப்பணிப்பின் வெற்றி. ஆகவே, அதன் வளர்ச்சியில் பல்வேறு வகையிலும் பங்கொண்ட அனைவரும் எமது நன்றிக்குரியவர்கள்.

புதிய உலகம் - கத்தோலிக்க நிகழ்ச்சியாயினும் சமய எல்லைகளைக் கடந்து மானுட நேயம், மானுட மேம்பாடு என்னும் தளத்தில் நின்று நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுவதால் சமயங்கடந்த பரந்த நேயர் வட்டத்தைக் கொண்டுள்ளது. பல இளங்கலைஞர்கள் இனங்காணப்படவும், வளரவும் புதிய உலகம் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளது. சமூக உணர்வோடும் இலக்கியச் சுவையோடும் சமயக் கருத்துக்கள் சொல்லப்படவேண்டும் என்பதை தனது வழிமுறையாகக் கொண்டுள்ள புதிய உலகம் உள்ளத்தின் ஆழத்தில் சிந்தனையில் ஒரு புதிய உலகை உருவாக்குவதையும், சமயங்களை வேலிகளாக்காது சமூக உறவுக்கு வாசலாக்குவதையும் தனது கொள்கையாக வரித்துக்கொண்டுள்ளது.

வரும் புதிய நூற்றாண்டின் சவால்களுக்கு முகம்கொடுக்கும் வகையில் இறை உணர்வும், மானுட நேயமும், மிக்க புதிய உலகைக் கட்டி எழுப்ப புதிய உலகம் புதுப்பொலிவுடன் தொடர்ந்து ஒலிக்கும்.

- மலர்வேந்தன்

## என்ன சொன்னார்?

(ஒரு பாப்பா பாடல்)

எங்கள் வீட்டில் ஐவர்
அதிலே கடைசி நான்தான்
அம்மா அப்பா இருவர்
அடுத்தது அக்கா இருவர்.

எத்தனை எதிர்பார்ப் பிங்கே
எத்தனை ஆயத்தம் எங்கும்
உலகம் மகிழும் ஜூபிலி
நெருங்கி வருகிறதாமே.

பொங்கும் ஆனந்தத்துடன்
புவிவாழ் ஏழைகளுக்கு
உதவி தாழ்மை மனத்துடன்
உலகில் வாழ்வதே சிறப்பு.

எம்மை நேசிப்பதுபோல்
பிறரை நேசித்தவர் மேல்
அன்பைப் பொழிந்து நல்ல
பிள்ளையாய் வாழவேண்டும்

கடவுள் உலகம் தந்தார்
எம்மை வாழச் சொன்னார்
அதிலும் பிறரை சமனாய்
மதித்து நடக்கச் சொன்னார்.

யே. பாரதிப்பிரியா
ஆண்டு - 6.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலிய பொது அறிவுப் போட்டி - 42

1. சாலமோன் மன்னர் இஸ்ராயேல் மீது எத்தனை ஆண்டுகள் ஆட்சி செலுத்தினார்? (காண் ..... 1 அரசர்)

........................................................................................................

2. இயேசு கூறிய பேரரசரின் நகரம் எது? (காண்......மத்தேயு)

........................................................................................................

3. 'நான் திருத்தூதர்களிடையே மிகக் கடையவன்' இக்கூற்று யாருடையது?

........................................................................................................

4. தென்கிழக்கு ஆசிய நாடுகள் சுருக்கமாக எவ்வாறு அழைக்கப்படுகிறது?

........................................................................................................

5. இலங்கையில் 'தூங்கல் வியாதி' இருப்பது அண்மையில் முதன் முதலாகக் கண்டு பிடிக்கப்பட்டது. இந்நோயை உருவாக்கும் ஒட்டுண்ணியைக் காவிச்செல்லும் ஈயின் பெயர் என்ன?

........................................................................................................

6. விண்வெளிப் பயணத்தில் தலைமைதாங்கிச் சென்ற முதலாவது பெண் விண்ணியல் கமாண்டர் யார்?

........................................................................................................

பெயர்.......................................................................

முகவரி.......................................................................

.......................................................................

...................................... இங்கே வெட்டவும் ......................................

## போட்டி விதிகள்

போட்டியில் ஆறு வினாக்களுக்கும் சரியான விடைகளை அளிப்போர் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு ரூபா 100/- பரிசாக வழங்கப்படுவதோடு ஐந்து வினாக்களுக்கு, நான்கு வினாக்களுக்கு மூன்று வினாக்களுக்கு மட்டும் சரியான விடைகளை அளிப்பவர்களில் தெரிவு செய்யப்படும் ஒவ்வொருவருக்கும் முறையே 75/- 50/- 25/- ஆகிய பரிசுத் தொகைகள் வழங்கப்படும்.

போட்டியில் அனைவரும் பங்குபற்றலாம். ஆனால் தொண்டனில் வெளிவரும் கூப்பனில் அனுப்பப்படும் விடைகள் மட்டுமே போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். ஒருவர் எத்தனை கூப்பனை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

**விடைகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள்: 25-10-99**

**முகவரி: விவிலிய பொது அறிவுப் போட்டி - 42,**
**தொண்டன், அ. பெ. எண். 44, மட்டக்களப்பு. 30000.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலிய - பொது அறிவுப் போட்டி - 40 முடிவுகள்

விடைகள்:

1. போவாசு 2. நினிவே 3. புனித பவுல் திமோர்த்தேயுவுக்குக் கூறியது
4. சத்தியஜித்ரே 5. நிக்சன் 6. இரண்டாவது தடவையாகப்பெற்றுள்ளது

பரிசு பெறுவோர்:

ரூபா 100/- — B. பிலோமினா
32, ஆசிரியர் சதுக்கம்,
உவர்மலை, திருமலை

ரூபா 75/- — யாரும் தெரிவாகவில்லை.

ரூபா 50/- — வேஜின் பாத்லட்
மாதா கோவிலடி,
பாலையூற்று, திருகோணமலை.

ரூபா 25/- — ஞா. ஜொய்சி ரஜனி
18, சங்கபோ மாவத்த
பெறுபன வீதி,
இரத்மலானை.

## நினைவஞ்சலி



திரு. செ. செ. அந்தோனிப்பிள்ளை
மலர்வு: 14-9-1918 உதிர்வு: 25-1-1986



திருமதி இருதயமேரி அந்தோனிப்பிள்ளை
மலர்வு: 8-4-1920 உதிர்வு: 15-8-1996

ஆண்டவரின் இல்லத்தில் எம் (என்) வாழ்நாள் எல்லாம்
நாம் (நான்) குடியிருக்க வேண்டும்
ஆண்டவரின் அழகை நாம் (நான்) காணவேண்டும். (திருப். 27-4)

ஆண்டவரின் சந்நிதியில் அமைதியுடன் இளைப்பாற இறைஞ்சுகிறோம்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மற்றும் குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணக வாழ்வின் 3ம் மாத நினைவஞ்சலி



மலர்வு : 1919-08-13

உதிர்வு : 1999-06-22

**திருமதி. அல்றீனா இராஜேந்திரம் (அனலீன்)**

"ஏனெனில் இறந்தோர் பாவத்தினின்று விடுதலை பெற்று விட்டனர் அன்றோ? கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை."

உரோ : 6:7-8

வாழ்வதற்கு சித்தங் கொண்டு கருவாக்கினீர்.
சாவதற்கும் அன்றே நாளையும் நியமித்தீர்.
இத்தரை மீதினில் சௌபாக்கியவதியாக்கினீர்.
அவ்வுலக வாழ்வுக்கும் நீரே அழைத்திட்டீர்.
இவ்வுலகில் இவர் ஆற்றிய நல்லதை நோக்குவீர்.
இவர் பாவமனைத்தையும் அதனாலே போக்கிடுவீர்.
அகிலமெங்கும் நிறைந்த பரமே, தந்தையே நீர் .
விண்ணக வாழ்வை இவருக்கு ஈந்திடுவீர்.
என்று நம்பிக்கையுடன் இறைஞ்சுகிறோம் அருள்வீர்.

குடும்பத்தினர்.

"அனலின்ஸ்"
72. புனித செபஸ்தியார் வீதி,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka




## இலங்கை வானொலி தேசிய சேவையில் கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ் செப்டம்பர் - 1999

| | | |
|---|---|---|
| நாள் | : | 15,16,17 |
| நேரம் | : | காலை 5.50 மணி |
| | | கத்தோலிக்க நற்சிந்தனை |
| வழங்குபவர் | : | அருள் சகோதரி மாறி புளோரன்ஸ் அவர்கள் |
| நாள் | : | 19 |
| நேரம் | : | மாலை 7.00மணி |
| | | புதிய உலகம் |
| | | 1000மாவது சிறப்பு மலர் |
| நாள் | | 21 |
| நேரம் | : | மாலை 7.45 மணி |
| | | சிறுவர் உலகம் |
| நாள் | : | 25,26,27,28 |
| நேரம் | : | காலை 5.50 மணி |
| | | கத்தோலிக்க நற்சிந்தனை |
| வழங்குபவர் | : | S. பத்மநாதன் அவர்கள் |
| நாள் | : | 29,30,01 |
| நேரம் | : | காலை 5.50 மணி |
| | | கத்தோலிக்க நற்சிந்தனை |
| வழங்குபவர் | : | F. அஞ்சலின் சுப்பிரமணியம் அவர்கள் |

**தொகுப்பு :** மலர்வேந்தன்

**தொடர்பு :** சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண். 44
மட்டக்களப்பு - 30000

*VANASINGE PRINTERS, BATTICALOA.*

Cover Printed by : St. Joseph's Catholic Press, Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org